பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஐப்பசி 15 செவ்வாய்க்கிழமை (01—11—1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 341

..க் தயாரிப்பு பொருள்கள் மற்றும் ..ளிர்பானத் தயாரிப்புகளைப் பெற்றிட:
கணேஷா
..வர்த்தக நிலையம் ..கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

இனிப்பு, சொக்கலட், பிஸ்கட் மற்றும் பழவற்றல்கள் விற்பனையாளர்
கணேஷா
வர்த்தக நிலையம், 65, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# சுற்றுலாத்துறை அமைச்சராக ..தொண்டா நேற்று பதவியேற்பு!

## மலையக வாக்குகள் சந்திரிகாவுக்கே!

தொண்டமான் அமைச்சரானதன் மூலம் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிகா குமாரதுங்காவுக்கு மலையகத் தமிழர்களின் வாக்குகள் பெருமளவு கிடைக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

மலையக மக்களின் தலைவர்களான தொண்டமான், செல்லச்சாமி, சந்திரசேகரன் ஆகிய மூவரும் சந்திரிகாவை ஆதரிப்பதால் மலையகத் தமிழர்களின் வாக்குகள் ஒட்டுமொத்தமாக சந்திரிகாவுக்கே விழும்.

ஆனால் இந்த மூன்று தலைவர்களையும் சேர்த்து வைத்துக் கொண்டு பொ. ஐ. மு.

(6ஆம் பக்கம் பார்க்க)

## ..டுத்த வார ஜனாதிபதித் தேர்தலில் ..ந்திரிகாவை இ.தொ.கா. ஆதரிக்கும்

கொழும்பு, நவம்பர் 1

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும், நாடாளுமன்ற ..னருமான திரு. சௌமியமூர்த்தி தொண்டமான் பொதுமக்கள் ..முன்னணி அரசில் சுற்றுலாத்துறை அமைச்சராக நேற்று பதவி ..றறார்.

இதனையடுத்து எதிர்வரும் 9 ஆம் திகதி நடைபெறவிருக்கும் ..னாதிபதித் தேர்தலில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி வேட்பாள..ன பிரதமர் சந்திரிகா குமாரதுங்கவை இ. தொ. கா. முழுமூச்சுடன் ..தரிக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

..துவரை காலமும் தகவல் ..ற, சுற்றுலாத் துறை, ..ரும் விமானப் போக்குவ.. அமைச்சராகப் பணிபு.. ..தர்மசிறி சேனநாயக்கா.. இருந்து சுற்றுலாத்.. பிரித்தெடுக்கப்பட்டு ..ண்டமானிடம் ஒப்ப..கப்பட்டது.

..ன்படி — ..சுற்றுலாத்துறை ..ச்சராகத் தொண்டமா.. —

..கவல்துறை விமானப் ..க்குவரத்து அமைச்சராக ..சிறி சேனநாயக்காவும்— ..ருமதி நிருபமா ராஜ.. சுற்றுலாத்துறை பிரதி ..மச்சராகவும் —

நேற்றிரவு ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா முன்னிலை



யில் சத்தியப் பிரமாணம் செய்து பதவியேற்றனர்.

கடந்த 17 ஆண்டு காலமாக ஆட்சியிலிருந்த ஐ.தே.க. அரசுகளில் அமைச்சராகப் பணிபுரிந்து வந்த தொண்டமான், கடந்த பொதுத் தேர்தலில் ஐ. தே. க. வின் தேசியப் பட்டியல் மூலம் எம். பியாகத் தெரிவு செய்யப்பட்டவர்.

பொ. ஐ. முன்னணி அரசு அமைத்ததும் அதில் சேர்ந்து அமைச்சராவதற்கு தொண்டமான் பகீரதப் பிரயத்தனம் செய்து வந்தார் என்பதும்—

பிரதமர் சந்திரிகா குமாரதுங்க ஆரம்பத்தில் அதற்கு இணங்காததால், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமது இ. தொ. காங்கிரஸைச்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கிளாலி - பூநகரி படகுச் சேவை

யாழ்ப்பாணம், நவ. 1

கிளாலி — பூநகரிப் படகுச் சேவை இன்று செவ்வாய்க் கிழமை வழமையான நேரத்தில் நடைபெறும் என்று விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர். (ஐ)

## புயலால் உயிரிழந்தோர் 29 ஆக உயர்வு

சென்னை, நவ. 1

வங்காள விரிகுடாவில் மையங்கொண்டிருந்த தாழமுக்கம் நேற்று அதிகாலை தமிழகத்துக்கு மேலாக தரையைக் கடந்தபோது வீசிய புயல் காரணமாக வெள்ளத்தின் காரணமாக சென்னையில் மொத்தம் 29 பேர் உயிரிழந்தனர்.

இவர்களில் 14 பேர் மின்சார வயர்கள் அறுந்து விழுந்ததினால் மின்சாரம் தாக்கி இறந்துள்ளனர். வீடுகள் இடிந்து விழுந்ததாலும் சிலர் மரணமானார்கள்.

வீடு ஒன்று இடிந்து விழுந்ததில் மட்டும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 8 பேர் கொல்

(6ஆம் பக்கம் பார்க்க)



காமினி திஸாநாயக்காவின் பூதவுடல் கடந்த புதனன்று நாடாளுமன்றக் கட்டடத்துக்குக் கொண்டு செல்லப்பட்டபோது பூதவுடல் தாங்கிய பேழையை சபாநாயகர் கே. பி. இரத்நாயக்கா, பிரதமர் சந்திரிகா குமாரதுங்கா மற்றும் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் சம்பிரதாய பூர்வமாகப் பொறுப்பேற்ற போது எடுக்கப்பட்ட படம்.

## ..ாமினி கொலை குறித்து விசாரிக்க ..ந்திய அதிகாரிகளை அழையுங்கள்!

### ..ிமா திஸாநாயக்கா பிரதமர் சந்திரிகாவுக்குக் கடிதம்

கொழும்பு, நவ. 1

..து கணவர் காமினி ..ாநாயக்காவினதும் ஏனை..ரினதும் படுகொலைகள் ..ி விசாரிப்பதற்குஇந்தியா.. ..வியை ஐ.தே.கவின் .. வேட்பாளரான ..ிமா திஸாநாயக்கா ..தாக அறிவிக்கப்.. ..திஸாநாயக்கா பிர.. ..திரிகா குமாரதுங்கவுக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில், இந்தக் கொலைக் குற்றம் குறித்து விசாரணை நடத்த இந்தியாவைச் சேர்ந்த இரு முன்னணி புலன் விசாரணை அதிகாரிகளின் பெயர்களைக் குறிப்பிட்டுள்ளார்.

ராஜீவ் காந்தி படுகொலை பற்றி விசாரிக்க நியமிக்கப்பட்ட விசேட புலன் விசாரணைக் குழுவுக்குத் தலைமை வகித்த மத்திய புலனாய்வுப் பணியக கூட்டுப்பணிப்பாளர் திரு. டி. ஆர். கார்த்திகேயன் ஓய்வுபெற்ற சட்டமருத்துவ விஞ்ஞானப் பணிப்பாளர் பேராசிரியர் பி. சந்திரசேகரன் ஆகிய இருவரது பெயர்களையுமே கடிதத்தில் சிறிமா திஸாநாயக்கா குறிப்பிட்டுள்ளார்.

ஊவா, சப்பிரகமுவா, மத்திய மாகாணங்களில் தேர்தல்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## ..ண்டு துளைக்காத மார்பு கவசத்தை ..அணிவதற்கு மறுத்தார் காமினி!

கொழும்பு, நவ. 1

..ப் பயமுறுத்தல் ..ட்டிருப்பது தெரிந்.. சம்பவதினம் ..ஸாநாயக்காகுண்டு ..த மார்புக் கவ.. அணிவதற்கு மறுத்து..ர் என்று தெரிவிக்கப்..து.

.. துளைக்காத மார்புக் கவசத்தை அணிந்திருப்பின் தமது சகாவான லலித் அத்துலத்முதலி துப்பாக்கிக் குண்டிலிருந்து உயிர்தப்பியிருக்கலாம் என்பது தெரிந்திருந்தும் காமினி அதனை அணிவதற்கு மறுத்து விட்டார்.

தேர்தல் களத்தில் இறங்கிய பின்னர் பாரமான அந்த குண்டு துளைக்காத ஜாக்கட்டை எப்படி அணிந்து கொண்டு நடமாடுவது என காமினி தமது பாதுகாப்பு அதிகாரிகளைக் கேட்டார் என்று ',சண்டே ரைம்ஸ்'' தகவல் வெளியிட்டுள்ளது.

கடந்த 24 ஆம் திகதி

( 3ஆம் பக்கம் பார்க்க)

### ..ண்ட்பாஸ் குண்டுவெடிப்பு:

## ..சிகரெட் புகைக்கச் சென்றதால் ..ிஸ்டியின் மகன் உயிர் தப்பினார்!

கொழும்பு, நவ. 1

..ப்பது உயிரைப் பறிக்..ன்பது டாக்டர்களின் ..க்கையாகும். ..ால் ஒருவர் புகைப்ப.. மேடையை விட்டி..ார். அதனால் அவர் ..தப்பினார்! ..ல் அவரின் தந்தையும் ..ிழந்தனர். .. குண்டு ..இவ்வாறு மயிரிழையில் உயிர்தப்பியவர் கொழும்பு மாநகர சபையின் ஐ. தே. க உறுப்பினர் பேபியன் விலாந்த பெரேரா ஆவார்.

அச்சம்பவத்தில் தமது தந்தையான ஐ.தே.க அமைப்பாளர் கிறிஸ்டி பெரேராவையும் (வயது 62), சகோதரி சிரியானி குணசேகராவையும் (வயது39) அவர் இழந்தார்.

கிராண்ட்பாஸ் கூட்டத்தில் காமினி திஸாநாயக்கா பேசி முடிந்ததும், பேபியன் விலாந்த பெரேரா சிகரெட் புகைப்பதற்காக மேடையில் இருந்து கீழே இறங்கினார். அச் சமயம் தான் குண்டு வெடித்தது. அதனால் விலாந்த பெரேரா உயிர் தப்பினார்.

சிரியானி கு..சேகரவின் கணவர் பேர்னா..குண..

(6ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் கடற்படையினர் தாக்கு! ஒன்பது தமிழ் மீனவர்கள் மரணம்!!

யாழ்ப்பாணம், நவ. 1

மன்னார் மாவட்டம் அரிப்புத்துறைக் கடற்பரப்பில் தொழிலில் ஈடுபட்டிருந்த தமிழ் மீனவர்கள் மீது கடந்த வியாழனன்று கடற்படையினர் நடத்திய கண்மூடித்தனமான தாக்குதலினால் 9 பேர் உயிரிழந்தனர். இவர்களில் 6 பேரின் சடலங்கள் கடலில் இருந்து மீட்கப்பட்டன.

படையினரின் தாக்குதல்களால் கடற்றொழில் உபகரணங்களும், வள்ளங்களும் சேதமடைந்தன.

கொல்லப்பட்ட 9 மீனவர்களும் அரிப்புத்துறையைச் சேர்ந்தவர்கள். அவர்களின் பெயர் விவரம் வருமாறு:.

★ துரையப்பு விஜயரட்ணம் [வயது 26]

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ. தே. கட்சி ஆதிக்கம்; காமினி ஆதரவாளரிடம்?

கொழும்பு, நவ. 1

ஐக்கிய தேசியக் கட்சியில், காமினியின் மரணத்தில் பின்னர், அவரது ஆதரவாளர்களின் ஆதிக்கமே மேலோங்கி இருப்பதாக சிங்களப் பத்திரிகைகளில் தகவல் வெளியாகியுள்ளது.

முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா எதிர்க்கட்சித் தலைவராகவும் கட்சியின் உபதலைவராகவும் தெரிவு செய்யப்பட்ட போதிலும் —

காமினியின் மைத்துனரும், ஜனாதிபதியின் ஆலோசகருமான விமல் விக்ரமசூரியாவும் மற்றும் காமினியின் ஆதரவாளர்களுமே கட்சித் தலைமைப்பீடத்தில் இப்போது செல்வாக்குள்ளவர்களாக விளங்குகிறார்களாம்

திருமதி சிறிமா திஸாநாயக்கா ஜனாதிபதி வேட்பாளராக நிற்பதற்கு விரும்பாத போதிலும், மேற்படி குழுவினரே அவரை சம்மதிக்க வைத்ததாகவும் சிங்கள வார இதழ்கள் தெரிவித்துள்ளன.

ஜனாதிபதி தேர்தல் முடிந்ததும் டி. பி. விஜேதுங்கா தனது பதவியை ராஜினாமாச் செய்யும்போது ஐ. தே. கட்சியின் தலைவர் பதவியையும் துறப்பார்.

அப்போது கட்சித்தலைவர் தெரிவின்போது விக்கிரமசூரியா குழுவினர் ரணிலுக்கு எதிராகச் செயற்படுவர் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் அப்பத்திரிகைகள் தெரிவிக்கின்றன.

## ரணில் போட்டியிடுவதையே ஜே.ஆர், டி. பி. விரும்பினர்

கொழும்பு, நவ. 1

காமினியின் மறைவின் பின்னர் ஜனாதிபதி வேட்பாளராக ரணில விக்கிரமசிங்காவே போட்டியிடவேண்டும் என்று முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவும் தற்போதைய ஜனாதிபதி விஜேதுங்காவும் பகிரங்கமாக தங்கள் விருப்பத்தை வெளியிட்டனர். என்று தெரிவிக்கப்படுகிறது.

ரணில் விக்கிரமசிங்காவை அழைத்து ஜனாதிபதி வேட்பாளர் நியமனத்தை ஏற்கும்படி ஜெயவர்த்தனா புத்திமதி கூறினார். அதுபோன்றே விஜேதுங்காவும் ஆலோசனை வழங்கினார்.

இதனை ரணில் ஏற்றுக்கொண்ட நிலையில்தான் சிறிமா திஸநாயக்காவை ஜனாதிபதி வேட்பாளராக நியமிக்கவேண்டும் என்ற முயற்சியை ஐ.தே.க. உதவிப் பொறுப்பாளர் சுசில் முன

(6ஆம் பக்கம் பார்க்க)

### ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு

## 8, 9, 10 ஆம் திகதிகளில் பாடசாலை விடுமுறை

கொழும்பு, நவ. 1

ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு எதிர்வரும் 8 ஆம் 9 ஆம், 10 ஆம் திகதிகள் (செவ்வாய், புதன், வியாழன் ஆகிய தினங்கள்) பாடசாலை விடுமுறை தினங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

இது தொடர்பான அறிவித்தல் கல்வி, உயர்கல்வி அமைச்சினால் சகல பாடசாலை அதிபர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. (உ-ஐ)

### முச்சந்தி முரளி



## குண்டுத் தாக்குதலுக்கு ஒத்திகை மருதானைக் கூட்டத்தில் நடந்தது!

### வீடியோ கசெட்டில் அது பதிவாகியுள்ளதாம்

கொழும்பு, நவ. 1

காமினி திஸாநாயக்காவின் கொலை தொடர்பான வீடியோ கஸட் ஒன்றை ஐக்கிய தேசியக் கட்சியினர் நேற்று கொழும்பில் பத்திரிகையாளர் களுக்குக் காண்பித்தனர்.

காமினி திஸாநாயக்காவையும் ஏனையோரையும் கொலை செய்த குண்டு வெடிப்பின் சூத்திரதாரி என்று சந்தேகிக்கப்படும் பெண்ணும் வேறு சிலரும் மருதானையில் முன்னர் நடந்த ஒரு பிரசாரக் கூட்டத்தில் கொலை தொடர்பாக ஒத்திகை பார்க்கும் காட்சிகள் அந்த வீடியோ கஸெட்டில் இடம் பெற்றிருந்ததாக இந்தியவானொலி தெரிவித்தது. (உ-ஐ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

இல. 455, ஸ்ரான்லி வீதியில், யாழ். மத்திய பஸ் நிலைய முன்பாக மூன்று அறைகளுடைய கடையும், கிணறு, மலசலகூடமுடைய காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: 55/3, அம்பலவாணர் வீதி, அத்தியடி. (33430)

F10 வீடியோ கமரா, 180 டெக், ரிமோட்கொன்றோல், சாஜ்ஜர் ஆகியன விற்பனைக்கு நல்ல நிலையில் உண்டு. தொடர்பு: யூட் போட்டோ, 51-4 ஆம் குறுக்குத் தெரு, சின்னக் கடை, யாழ்ப்பாணம். (கி-9569)

மூன்று மாத பொமனேரியன் பெண், அல்சேஷன் ஆண் நாய்க்குட்டிகளும், சில்வர், பாபடிகல்ஸ், சில்க்கி, பாமாஸ், போலிஸ் முட்டைகளும், ஒரு வாரக் குஞ்சுகளும் விற்பனைக்குண்டு. இல. 1, தவக்குமார் வீதி, மடத்தடி (தூபி அருகில்), சங்கத்தானை, சாவகச்சேரி. (33593)

கல்பேட் இறைச்சிக் கோழி மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்தும் தரப்படும். சிமாட்டி பாம், மயிலங்காடு சுன்னாகம் [33571]

## சோதிடம்

4-11-94இல் வியாழன் மாற்றம் அதிர்ஷ்டமானதா? கல்வி, தொழில், பிரயாணம், திருமணம், ஜாதகக் குறிப்புடன் நேரில் சந்திக்கவும். ஸ்ரீமாவை விநாயகர் சோதிட நிலையம், 158, கோயில் வீதி, நல்லூர். (33566)

## இறைச்சிக் கோழி

தீபாவளியை முன்னிட்டு வாடிக்கையாளர்களுக்கு புறொயிலர் இறைச்சிக் கோழிகள், பேட்டுக் கோழிகள், சேவல்கள், சூப்பு குஞ்சுகளும் சுகாதார முறைப்படி சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: இறைச்சிக் கோழி விற்பனை நிலையம், இல. 15/7, முருகேசர் ஒழுங்கை முத்திரைச் சந்தி, நல்லூர். [33580]

## மிருதங்கம்

புதிய மிருதங்கம் மற்றும் தபேலா டோல்கி ஆகியவற்றை சிறந்த முறையில் குறித்த நேரத்தில் செய்து கொள்வதற்கு கோவிந்த பிள்ளை விஜயகுமார், இல. 192/1, நாவலர் வீதி, பெருமாள் கோயிலடி, யாழ்ப்பாணம். [33547]

## பணிப்பெண் தேவை

இரண்டு பிள்ளைகளை பராமரிக்கக்கூடிய 40 வயதிற்கு மேற்பட்ட பெண் தேவை. தங்குமிட வசதியும், உணவும், கவர்ச்சியான சம்பளமும் வழங்கப்படும். நேரில் தொடர்பு கொள்ளவும்: மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையம், திருநெல்வேலி. [சி-9547]

## தவறிவிட்டது

3321 V இலக்க அடையாள அட்டை 28-10-94 இல் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து இல. 67/5, சினிவாசகம் வீதி, கொட்டடி யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும். சன்மானம் தரப்படும். [33595]

## கல்விக் கல்லூரி வெற்றிடங்கள்

யாழ்ப்பாணம், நவ. 1

கல்வி, உயர்கல்வி அமைச்சின் கீழ் இயங்கும் கல்விக் கல்லூரிகளில் கல்விக்குரிய பதவியருக்கான வெற்றிடங்கள் உள்ளன என்று அறிவிக்கப்படுகிறது.

முடிவு திகதி எதிர்வரும் 11ஆம் திகதி என்றும் —

இது சம்பந்தமான விவரங்களை யாழ். வலயம் I கல்வித் திணைக்களத்தில் பார்வையிடலாம் என்றும் பணிப்பாளர் அறிவிக்கின்றார். [ஓ]

---

# C. I. M. A.
## STAGE I
(New Syllabus)
## MAY – 1995

# I. A. B.
## FOUNDATION INTERMEDIATE
## JUNE – 1995

**COMMENCEMENT – 05-11-1994**

FOR DETAILS:

**SCHOOL OF BUSINESS ADMINISTRATION**
16, 3RD CROSS STREET,
JAFFNA.

(சி-9570)

---

# ஓராண்டு நினைவஞ்சலி



செல்வன்

## செல்லையா சிறீஸ்கந்தராசா

மலர்வு: 25 – 01 – 1970 | உதிர்வு: 11 – 11 – 1993

திதி: 01 — 11 — 1994

கண்ணின் மணியாய் காத்து வளர்த்தோம்
புண்ணியம் இல்லையோ பொன்னில் மகிழ்ந்திட
காலன் வந்தானோ! கார் அதனில்
ஐயா! உம் பிரிவால் தவியாய் தவிக்கிறோம்.

தங்கள் பிரிவால் துயருறும்;
தந்தை, தாய், தம்பிமார்,
அக்காமார், அத்தான்மார்,
மருமக்கள், உறவினர்மார்.

தகவல்:
கா. செல்லையா,
கொக்குவில் மேற்கு,
பிடாரி கோயிலடி.

(33590)

---

# தீபாவளித் திருவிழா

ஏழாலை தெற்கு களபாவோடை
வசந்தபுர வசந்தநாகபூஷணி அம்பாள்
தேவஸ்தானத்தில்
தீபாவளியன்று விசேட நிகழ்ச்சிகள் நடைபெறும்

★ காலை 8-00 மணி — விசேட அபிஷேகம்
விசேட மேளக்கச்சேரிகள்
என். கே. பத்மநாதன் குழுவினர் (அளவெட்டி)
கானமூர்த்தி, பஞ்சமூர்த்தி குழுவினர்
(கோண்டாவில்)

★ காலை 10-00 மணி — விசேட பூஜை

★ காலை 10-30 மணி — தீப வழிபாடு
அடியார்கள் அனைவரும் ஒளித்தீபம் ஏற்றுதல்
(சிட்டி விளக்கு கொழுத்துதல்)

★ 11-00 மணி — விசேட சொற்பொழிவு
செம்மொழிச் செல்வன், தமிழ்த்தேன்
சிவ. மகாலிங்கம் (பி. ஏ.)

★ 12-00 மணி — ஆலய பஜனைக் குழுவினரின் விசேட பஜனை

★ 1-00 மணி — அன்னதானம்

தேவஸ்தான பராமரிப்பிலுள்ள சிறுவர்களின் நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

தீபாவளி உபயகாரர்கள்,
திருமதி செல்லம் தம்பித்துரை,
செல்லப்பா நவரத்தினராசா (கப்பூர்),
குப்பிளான் தெற்கு.

தேவஸ்தானம் [33577]

---

# 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 17–11–1947

உதிர்வு: 12–11–1993

## அமரர் சின்னையா பத்மராசா
(எஸ். பத்மராசா அன்சன்ஸ் நகைத்தொழிலகம், சங்கானை)

திதி: 01 — 11 — 1994 திரயோதசி

வேண்டுவன வெல்லாம் விரும்பித் தந்தெங்கள்
தூண்டா மணிவிளக்காய்த் துலங்கி நின்றாய்–
ஆண்டொன்றாய்
அழுதழுது நாமும் அரனார் பதம் பணிந்தோம்.
பழுதில்லா வுன்பணியை நினைந்து.

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்.

''கோகுலவாசம்''
77, பிரதான வீதி,
சங்கானை.

(33573)

---

# அந்தியேட்டி அழைப்பும் நன்றி பகர்வும்

மண்ணில்: 19 – 04 – 1924



விண்ணில்: 02 – 10 – 1994

## அமரர் ஹென்றி பசுபதி
(ஓய்வு பெற்ற சிறைச்சாலை உத்தியோகத்தர்)

அக்டோபர் 2 ஆம் திகதி அமரத்துவம் எய்திய எமது தந்தையின் அந்தியேட்டி வைபவம் இன்று (1-11-1994) செவ்வாய்க்கிழமை அன்னராது இல்லத்தில் நடைபெறவுள்ளது. இவ்வைபவத்தில் பங்கு கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னராது இறுதிக் கிரியைகளில் பங்கு கொண்டு எமக்கு உதவிய உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் ஆறுதல் கூறியவர்களுக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும் எம் நெஞ்சார்ந்த நன்றியறி தலைத்தெரிவித்துக் கொள்கிறோம்.

மனைவி, பிள்ளைகள்.
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

மடுவில் தெற்கு,
சாவகச்சேரி.

(33584)

---

# யாழ்ப்பாணம் நீராவியடி கலைக் கல்லூரியின்
# 15ஆவது ஆண்டு நிறைவு விழா

இடம்: நல்லூர் மங்கையர்க்கரசி பாடசாலை முன்றில்

காலம்: 06 – 11 – 1994
ஞாயிறு மாலை 6-00 மணி

தலைவர்: புலவர் முத்துஇராசரத்தினம்

பிரதம விருந்தினர்:
புதுவை இரத்தினதுரை
(விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டு கழகப் பொறுப்பாளர், தமிழீழம்)

சிறப்பு விருந்தினர்:
திரு. வே. பொ. பாலசிங்கம்
(யாழ். மாநகரசபை ஆணையாளர்)
செல்வி மலர் சின்னையா
(நல்லூர் மங்கையர்க்கரசி பாடசாலை உப அதிபர்)

நிகழ்ச்சி:

கலைக் கல்லூரி வழங்கும்
திருமதி
இலங்கை வேந்தன் சிவசக்தியின்
நட்டுவாங்கத்தில்

## கதகளி பரதநாட்டியம்

கலைஞர் பொன்னுத்துரையின்
இசையமைப்பில்
**இன்னிசை விருந்து**

புலவர் முத்துஇராசரத்தினத்தின்
கதை வசனம் நெறியாள்கையில்

## இலங்கை வேந்தன்
(இசை, நடன நாடகம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்
- நிர்வாகம்.



கதகளி பரத கலாமணி இலங்கை வேந்தனின் நடனத் தோற்றம்

விழாச் சிறப்புற வாழ்த்துபவர்கள்:
**கணேசா நகையகம்**
இல. 194, சந்தோசம் தெரு (கஸ்தூரியார் வீதி)
யாழ்ப்பாணம்.

[33592]

---

# சபிண்டீகரண அழைப்பு

மண்ணில்: 15 – 01 – 1922



விண்ணில்: 02 – 10 – 1994

## அமரர் சின்னையா சிவசம்பு
(சன்னாசி)

எமது குடும்பத்தலைவரின் மரணச் செய்தி கேட்டு உடன் வந்து உதவியவர்களுக்கும், இறுதிச்சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும் எமது இதயபூர்வமான நன்றிகள்.

அன்னாரது ஆத்மசாந்திக் கிரியைகள் இன்று (01-11-1994) அவரது இல்லத்தில் காலை 10மணியளவில் நடைபெறும். ஆத்மசாந்திக் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி:
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

சிறுப்பிட்டி மேற்கு,
நீர்வேலி.

---

JAFFNA COLLEGE CEYLON

# யாழ்ப்பாணக் கல்லூரி
பட்டதாரிப் பிரிவு
464, மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம்

விரிவுரைகள் ஆரம்பமாகின்றன:

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரி
**B. A. I, B. A. II** இற்கான விரிவுரைகள்
பின்வரும் பாடங்களுக்கு ஆரம்பமாகின்றன.

1. அரசியல் விஞ்ஞானம்
2. ஆங்கில இலக்கியம் (English Literature)
3. தமிழ்மொழி
4. கிறிஸ்தவ நாகரிகம்
5. இந்துநாகரிகம்
6. பொருளியல்
7. மெய்யியல்

விவரங்களை நிறுவன அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும்

**G. C. E. (Adv. Level) Repeat Classes and G. S. Q. Classes will Start immediately after the results**

[சி-9546]

— அதிபர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயுள்வேத வைத்தியம் ஓர் அறிவுப் பொக்கிஷம்
# அதனைப் பேண உடன் நடவடிக்கை அவசியம்

★ ஆயுள்வேத வைத்திய முறை பற்றிய சுவடிகளும், தொன்மையான நூல்களும் பரம்பரை வைத்தியர்களிடம் இருந்து அழிந்து போகின்றன.

★ பல அனுபவம் மிக்க பாரம்பரிய வைத்தியர்களின் அறிவு அவர்களுடனேயே மறைந்து விடுகின்றது.

★ இந்தத் துக்ககரமான நிலைமையை நிவர்த்தி செய்து எமது பழம்பெரும் வைத்திய அறிவுப் பொக்கிஷங்களைப் பாதுகாக்க உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

★ ஆயுள்வேத வைத்தியத்தில் மேலைத்தேச சிகிச்சை முறையைக் கலப்பது உகந்ததல்ல.

இவ்வாறு கருத்து வெளியிட்டார் யாழ்ப்பாணத்தின் முன்னணி ஆயுள்வேத வைத்

## வைத்திய கலாநிதி மங்களாம்பாள் பேட்டி

தியர்களில் ஒருவராகத் திகழும் வைத்திய கலாநிதி இ. மங்களாம்பாள்.

ஆயுள்வேத வைத்தியத்தை வளர்த்து மீண்டும் அதனை மக்கள் மத்தியில் பிரபல்யம் அடையச் செய்ய வேண்டும். அதற்கேற்றால் போல ஆயுள்வேத மருந்துகளை உடனடியாக உட்கொள்ளக் கூடிய குளிசைகள், பாணிகள், கலவைகளாக்குவது அவசியம் அதன் பொருட்டு மருந்து தயாரிப்பில் புதிய தொழில் நுட்பங்களைக் கையாள வேண்டும் — என்று பல புதிய சிந்தனைகளை வெளியிட்ட அவர், தமது வைத்தியசாலையிலேயே பெரிய அளவிலான நவீன மருந்து தயாரிப்பு நிலையத்தையும் வைத்து நடத்துகிறார்.

நல்லூரில் மங்களபதி ஆயுள்வேத வைத்தியசாலையையும் மருந்தகத்தையும் தமது தம்பியார் வைத்திய கலாநிதி லக்ஷ்மண ஐயருடன் இணைந்து சிறப்பாக நடத்திவரும் மங்களாம்பிகை அம்மாள் ''மூல நோய்களும் முறையான சிகிச்சைகளும்'' என்ற நூலைஉம் அண்மையில் வெளியிட்டுள்ளார்.

உதயனுக்கு அவர் அளித்த பேட்டியில் இருந்து முக்கிய பகுதிகள் வருமாறு:-

கேள்வி: ஆயுள்வேத மருத்துவத்தின் அடிப்படை யாது? அதன் பிரத்தியேக தன்மை என்ன?

பதில்: ஆயுள்வேதம் என்பது இயற்கையோடு ஒன்றிய பாரம்பரிய மருத்துவமுறை ஆகும். இந்தியா, சீனா, மலேசியா, ஸ்ரீலங்கா முதலிய நாடுகளில் தொன்று தொட்டு ஆயுள்வேத மருத்துவ முறை நிலவி மக்களுக்கு நன்மை பயந்து வருகிறது.

இயற்கையான மூலிகைகளைக் கொண்டு, இயற்கையான காலநிலைகளின் படி, அந்த அந்தத் தேசத்தில் உள்ள பொருள்களைக் கொண்டு சிகிச்சை அளிக்கும் மருத்துவ முறையே ஆயுள்வேத மருத்துவம் ஆகும். இதில் உணவே மருந்தாகவும் மருந்தே உணவாகவும் அமைகின்றது.

ஆயுள்வேதம் ஒத்துக் கொள்ளாத நச்சுத் தன்மைகளை உடம்பில் பக்க விளைவாக ஏற்படுத்தாது.

சுருங்கக் கூறின் உடலின் சம நிலையைச் சீர் செய்யும் முறை தான் ஆயுள் வேதம்.

ஆயுள் வேதம் எந்தக் காலத்துக்கும் எமக்கு கை கொடுக்கக் கூடிய முது சொத்து யுத்தம் தொடங்கிய பின்னர் அதன் அருமையை மக்கள் உணர்ந்தார்கள். ஆயுள்வேத வைத்தியர்களை நாடி வந்தார்கள்.

இந்த நிலை தொடரக் கூடியதாக அதன் சிறப்பை பேணுவது இந்த துறை சார்ந்தவர்களினதும் மக்களினதும் கடமையாகும்.

### எண்பெரும் பிரிவுகள்

கேள்வி; ஆயுள்வேத வைத்தியம் சகல நோய்களுக்கும் உகந்ததா? அன்றேல் குறிப்பிட்ட சில நோய்களுக்கு மிகவும் பயனுடையதா?

பதில்; ஆயுள்வேதம் 8 பெரும் பிரிவுகளை உள்ளடக்கியது. காய சிகிச்சை, சல்லிய (ஆயுத) சிகிச்சை, ஊர்த்வாங்க (கழுத்துக்கு மேற்பட்ட) சிகிச்சை, கௌமார (குழந்தை) மருத்துவம், பூத (உளவியல்) வித்தியா, அகத (நஞ்சியல்) தந்திரம், ரசாயன தந்திரம், வாஜீகரண (பாலியல்) சிகிச்சை ஆகிய இந்த 8 பெரும் பிரிவுகளாகும்.

முன்னர் சகல நோய்களுக்கும் ஆயுள் வேதம் மூலம் சிகிச்சை அளிக்கப்பட்டது. ஆனால் பின்னர் சில பிரிவுகளின் வளர்ச்சி குன்றியது.

இப்பொழுது புற்றுநோய், காசநோய், தொய்வுநோய், சரும ரோகங்கள், வாதம், முறிவு-நெறிவு ஆகியவற்றுக்கு ஆயுள்வேத மருத்துவம் சிறந்த பயனைத்தருகின்றது.

கேள்வி: சித்தவைத்தியம், யூனானி வைத்தியம் ஆகியவற்றுக்கும் ஆயுள்வேத வைத்தியத்துக்கும் இடையில் உள்ள உறவு யாது?

பதில்: சித்த வைத்தியம், யூனானி வைத்தியம் இரண்டையும் ஆயுள்வேதம் என்ற பெரு விருட்சத்திலிருந்து கிளைத்தெழுந்த பகுதிகள் என்றே கூறலாம்.

சித்தவைத்தியம் ஆயுள்வேதத்தின் காய சிகிச்சை, ரசாயன தந்திரம் (காயகல்பம்) ஆகிய இரண்டுடனுமே சம்பந்தப்பட்டது.

யவனதேச முஸ்லிம் அரசர்கள் பூலோகசுகங்களை அனுபவிக்க விரும்பி பாலியல் சிகிச்சைத் துறை சார்ந்தவர்களை அழைத்துச் செய்த சிகிச்சையே யூனானி வைத்தியமாகும். இதைத் திப்பி வைத்தியம் என்றும் அழைப்பர்.

### தற்போதைய நிலைமை

கேள்வி: எமது நாட்டில் ஆயுள்வேத வைத்தியத்தின் தற்போதைய நிலைமை எத்தகையது?

பதில்: தொன்று தொட்டு எமது நாட்டில் ஆயுள்வேத வைத்தியம் பயிலப்பட்டு வருகிறது. பரராஜசேகரன் மன்னன் ஆயுள்வேத வைத்திய



நூல்களை எழுதியுள்ளார். 1921 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் ஆயுள்வேதக் கல்லூரி தாபிக்கப்பட்டது.

1956இல் எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயகாவின் தலைமையில் ஏற்பட்ட அரசாங்க மாற்றத்தின் விளைவாக இலங்கையில் சிங்களப் பகுதிகளில் ஆயுள்வேத வைத்தியத்துறை பெரும் வளர்ச்சி கண்டுள்ளது. அந்தளவு வளர்ச்சி தமிழ்ப் பகுதிகளில் ஏற்படவில்லை.

கேள்வி: தற்பொழுது ஆயுள்வேத வைத்தியர்கள் எவ்வளவுக்கு மேற்கத்தைய மருத்துவ முறையையும் இணைத்து செயல்படுகின்றார்கள். இதில் உள்ள நன்மை, தீமை யாவை?

பதில்: கிட்டத்தட்ட சகல ஆயுள்வேத வைத்தியர்களும் அவ்வாறே செய்கிறார்கள். இந்த இணைப்பு சரியானதென்று நான் கருதவில்லை. ஆயுள்வேத மருத்துவ முறை வேறு; மேற்கத்தைய மருத்துவமுறை வேறு.

வாத பித்த கபம் ஆகிய திரிதோஷங்களை அடிப்படையாக வைத்துச் சய்யப்படுவது ஆயுள்வேத வைத்தியம்.

நோய்க்கு எதிரான மருந்துகளைக் கொடுப்பது மேற்கத்தைய மருத்துவ முறை.

இந்த முறைகளை இணைப்பது தவறானது. ஆனால் ஆயுள்வேத வைத்தியத்துறை மேற்கத்தைய மருத்துவ முறையின் பகுப்பாய்வு முறைகளை மேற்கொண்டு மூலிகைகளையும் மருந்துகளையும் பகுப்பாய்வு செய்ய வேண்டும்.

### அபிவிருத்தி ஆலோசனைகள்

கேள்வி: தற்பொழுதைய பல்கலைக்கழக ஆயுள்வேத வைத்தியக் கல்வித்திட்டம் திருப்திகரமானதாக இருக்கின்றதா? அல்லது அதில் எத்தகைய முன்னேற்றங்கள் தேவை?

பதில்: ஆயுள்வேத மாணவர்களுக்கும் கூடுதலான உடல் கூற்றியல் அறிவைப் போதிக்க வேண்டும்; அவர்

பேட்டி கண்டவர்:
**பாரதிநேசன்**

களும் திட்டமிட்ட முறையில் உடலை வெட்டிஆய்வு செய்ய வேண்டும்; அவர்களுக்கும் இ[illegible]லிருந்தே அனுபவக்கற்கை நெறிவழங்க வேண்டும்; படிப்பு முடிந்த பின்னரான இரண்டு ஆண்டுகள் சம்பளத்துடன் கூடிய கற்கைநெறி கட்டாயமாக்கப்பட வேண்டும்; 5 ஆண்டுகளுக்குப் பிறகு பட்டப்பின் படிப்பு வசதி செய்து கொடுக்கப்பட வேண்டும்; ஆயுள்வேதத்தின் பெரும் பிரிவுகளில் சிறப்புப்பட்டம் பெற ஒழுங்கு இருக்க வேண்டும்.

### எதிர்காலம்

கேள்வி: ஆயுள்வேத வைத்தியமுறையின் எதிர்காலம் பற்றி என்ன கூற விரும்புகிறீர்கள்?

பதில்: அதன் எதிர்காலம் பிரகாசமானது. நிதானம் (நோய்), பூர்வரூபம், ரூபம், உட்சயம் (தீர்த்தல்), சம்பிராந்தி (பூரணமாகக் குணப்படுத்தல்) ஆகிய 5படி முறைச் சிகிச்சையை உள்ளடக்கியதும், நோய் மறுதலிப்பது இல்லாததுமான ஆயுள்வேத வைத்தியமுறை, அதன் மூலிகைக் குளிசைகள் ஆகியவற்றை நோக்கி இப்பொழுது மேற்குலகமே முன்னேறிக் கொண்டிருக்கிறது. ஆயுள்வேத மருத்துவத்தை புதிய பார்வையில் நோக்க மக்கள் தொடங்கியுள்ளார்கள்.

ஆயுள்வேத மருந்துகளை நவீனமயப்படுத்துவதும் அவசியமாகின்றது.

இன்னும் ஒரு முக்கிய விஷயத்தைச் சொல்ல வேண்டும். ஆயுள்வேத வைத்தியமுறை பற்றிய சுவடிகளும் தொன்மையான நூல்களும் பாரம்பரிய வைத்தியர்களிடம் இருந்து அழிந்து போகின்றன.

இன்னும், பல அனுபவமிக்க பாரம்பரிய வைத்தியர்களின் அறிவு அவர்களுடனேயே மறைந்து விடுகின்றது.

இந்த துக்ககரமான நிலைமையை நிவர்த்தி செய்து எமது பழம்பெரும் வைத்திய அறிவுப் பொக்கிஷங்களைப் பாதுகாக்க உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வைத்திய கலாநிதி மங்களாம்பிகை அம்பாள் இறுதியில் ''வைத்தியனுக்கு மருந்தில் நம்பிக்கை இருக்க வேண்டும்; மக்களுக்கு நோய்கள் பற்றிய அறிவு இருக்க வேண்டும் என்று கூறித் தமது பேட்டியை முடித்தார். ★

## இன்று நடைபெறவுள்ள கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், நவ. 1

தமிழீழ நிர்வாக சேவையினர் ஏற்பாடு செய்துள்ள கலந்துரையாடல்கள் இன்று பின்வரும் இடங்களில் நடைபெறும்.

வடபிராந்திய போக்குவரத்துச்சபை ஊழியர்களுக்கான கலந்துரையாடல் இன்று காலை 10 மணிக்கு கோண்டாவில் சாலையில் நடைபெறும்.

உடுவில் கோட்டப் பாடசாலைகளின் அதிபர், ஆசிரியர், ஊழியர்களுக்கான கலந்துரையாடல் இன்று பகல் 1.00 மணிக்கு யா / இராமநாதன் கல்லூரியில் நடைபெறும்.

தெல்லிப்பளைக் கோட்டப் பாடசாலைகளின் அதிபர், ஆசிரியர், ஊழியர்களுக்கான கலந்துரையாடல் இன்று பகல் 1.00 மணிக்கு யா / மகாஜனாக் கல்லூரியில் (மருதனாமடம்) நடைபெறும்.

சண்டிலிப்பாய் கோட்டப் பாடசாலைகளின் அதிபர், ஆசிரியர், ஊழியர்களுக்கான கலந்துரையாடல் இன்று பகல் 1.00 மணிக்கு யா / மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

வலி வடக்கு, வலி தெற்கு, வலி தெற்கு மேற்கு பிரதேச சபைகளின் ஊழியர்களுக்கான கலந்துரையாடல் இன்று பிற்பகல் 2.00மணிக்கு யா / இராமநாதன் கல்லூரியில் நடைபெறும்.

மாவட்ட வைத்தியசாலை தெல்லிப்பளை, சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை சங்கானை, மத்திய மருந்தகம் மகப்பேற்றுமனை மானிப்பாய், ஆகியவற்றின் ஊழியர்களுக்கான கலந்துரையாடல் இன்று பிற்பகல் 2.00 மணிக்கு மாவட்ட வைத்தியசாலை தெல்லிப்பளையில் (மானிப்பாய்) நடைபெறும்.

வங்கி ஊழியர்களுக்கான கலந்துரையாடல் இன்று பிற்பகல் 4.00 மணிக்கு யாழ். நாவலர் மண்டபத்தில் நடைபெறும்.

அனைவரும் தவறாது சமுகமளிக்கும்படி தமிழீழ நிர்வாக சேவையினர் கேட்டுக்கொள்கின்றனர். (ஐ)

## சந்திரிகாவுக்கு எதிராக துண்டுப் பிரசுரம்

மணிலா, நவ. 1

பிரதமர் சந்திரிகா குமாரதுங்கா அண்மையில் சிங்கப்பூருக்குச் சென்றது காமினியைக் படுகொலை செய்யும் திட்டம் குறித்து விடுதலைப் புலிகளுடன் கலந்துரையாடவே என்று கூறப்படும் துண்டுப் பிரசுரங்களை ஐ.தே.கவினர் தென்பகுதியில் விநியோகித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் செயல் சந்திரிகாவின் நற்பெயரை படுகொலை செய்யும் அப்பட்டமான சதி வேலை என்று நீதி, அரசமைப்பு, வெளிநாட்டு வர்த்தக அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

## தேனீக்கள் கலைந்து செல்லாமல் தடுத்து நிறுத்துவது எப்படி?

### சீனிக் கரைசலை உணவாக கொடுக்கலாம்

இன்று தேனீ வளர்ப்பாளர்கள் இரண்டு வகையான பிரச்சினைகளினால் தேனீ குடிகள் கலைவதனால் பாதிப்பு அடைகின்றனர். முக்கிய இரு பிரச்சினைகளும் மெழுகு அந்தின் தாக்கமும், உணவுப் பற்றாக்குறையுமாகும்.

தேனீ குடிகளின் பிரதான எதிரியாக மெழுகு அந்துக்கள் காணப்படுகின்றன. எமது பிரதேசத்தில் இரண்டு வகையான மெழுகு அந்துக்கள் காணப்படுகின்றன. ஒருவகை இரண்டு சென்ரிமீற்றர் நீளமான பெரியவை. மற்றையவை ஒரு சென்ரிமீற்றர் நீளமான சிறியவை.

இவ் அந்து தேன் பெட்டியில் உள்ள வெடிப்புக்கள் துவாரங்கள், நீக்கல்களினூடாக முட்டைகளை இடும். முட்டைகள் பொரித்து புழுக்கள் வதைச் சட்டங்களை சென்றடைந்து வதைகளை ஊடறுத்து உண்ணும். முழு வதைகளும் உண்ணப்பட்டு அவற்றில் உள்ள இடைவெளிகளில் வலைகள் காணப்படும். மெழுகு அந்துப் புழுக்களின் தாக்கத்தை தேனீக்களால் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர இயலாதபோது தேனீக்கள் விட்டு வேறு இடத்துக்கு இடம்பெயரும்.

இப்பிரச்சினையைத் தடுக்க தேனீ கூடுகள் நீக்கல்கள், வெடிப்புக்கள், துவாரங்கள், அற்றதாக இருத்தல் வேண்டும். நல்ல பெட்டிகளில் தேனீ செல்லும் வாசலூடு மெழுகு அந்து உட்புகுந்து அடித்தளப் பலகையில் முட்டைகளை இடும். முட்டைகள் பொரித்து சிறிய புழுக்கள் அடித்தளப்பலகையில் கொட்டுண்டு கிடக்கும். மெழுகுக் கழிவுகளை உண்டு வளரும் வளர்ந்த புழுக்கள் வதைச்சட்டங்களை சென்றடைந்து வதைகளைத் தாக்கும்.

தேனீ வளர்ப்பாளர்கள் அடித்தளப் பலகையை கிழமைக்கு ஒரு முறை தூரிகையினாலோ தேங்காய்த் தும்பினாலோ சுத்தம் செய்து வந்தால் இத் தாக்கத்தை பூரணமாகக் கட்டுபடுத்த முடியும்.

இரண்டாவது பிரச்சினை உணவுப் பற்றாக்குறையினால் தேனீ சமுதாயம் நலிவடைவதாகும். இது மழை காலம். பூக்கும் மரங்கள் அருகி காணப்படுகின்றன. எனவே தேனீக்களுக்கு உணவுத்தட்டுப்பாடு ஏற்படலாம். தேனீக்களுக்கு உணவு அருகி வரும் காலங்களில் தேனீக்கள் இல்லாத வதைகளைக் கொண்ட பலவீனமான தேனீச்சமுதாயங்களாக மாறும். இச்சந்தர்ப்பங்களில் மிகச்சுலபமாக மெழுகு அந்தினால் தாக்கப்படுகின்றன. இத்தாக்கத்தின் விளைவால் கூட்டை விட்டு அகலும்.

உணவுப்பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக சீனிக்கரைசல் உணவாக கொடுக்கப்பட வேண்டும். சீனியும் வெந்நீரும் சமபங்காக எடுத்து கரைத்து கொடுக்கலாம். நாளாந்தம் சிறிதளவு சீனிக்கரைசலை கொடுப்பதன் மூலம் தேனீக்களின் இன விருத்தியை ஊக்குவிக்க முடியும்.

உணவு கொடுத்தலை மாலை நேரங்களில் செய்வது சிறந்தது. உணவு கொடுக்கும் போது தேனீ பெட்டியில் எறும்பு ஏறாதவாறு தடுத்தல் வேண்டும். (ஓ)

## ஆசிரியர் சம்பளத்திட்டம் ஜனவரி முதல் அமுலுக்கு

கொழும்பு, நவ. 01

ஆசிரியர்களுக்கான புதிய சம்பளத் திட்டம் 1-1-1995 முதல் அமுல் செய்யப்படும் என்று கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சர் றிச்சர்ட் பதிரான அறிவித்துள்ளார்.

இத்திட்டத்தை உள்ளடக்கிய ஆசிரியர் சேவைத் திட்டம் கடந்த 6 ஆம் திகதிக்கு அரசாங்கத்தினால்பிரகடனம் செய்யப்பட்டது தெரிந்ததே. கடந்தமாதம்31ஆம் திகதிக்கு முன் இதனை அரச வர்த்தமானி மூலம் வெளியிட அமைச்சு ஏற்பாடுகள் செய்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

புதிய ஆசிரியர் சேவைத் திட்டமும் 1-1-1995 முதல் அமுலுக்கு வருகின்றது.

ஆசிரிய இடமாற்றங்களைக் கவனிக்க கல்வி அதிகாரிகள் ஆசிரிய தொழிற்சங்கப் பிரதிநிதிகள் ஆகியோரைக் கொண்ட இடமாற்ற சபைகள் அமைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (ஐ-எ)

ஐ. தே. க ஆட்சிக் காலத்தில்

## நான் யாழ்.செல்லஇருந்தது யுத்தத்தை நிறுத்த அல்ல

### முன்னாள் சபாநாயகர் முஹம்மது

கொழும்பு, நவ. 01

ஐ. தே. க. அரசு பதவியில் இருந்த போது விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்த நான் யாழ். செல்ல முன்வந்தது, போர் நிறுத்தத்தைத் கொண்டு வரவோ அல்லது பொருளாதாரத் தடையை நீக்குவதற்கோ அல்ல.

முன்னாள் சபாநாயகர் எம். எச். முஹம்மது முன் கண்டவாறு செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்

ஆனால்பொ.ஐ.மு. அரசு சமாதானப் பேச்சுவார்த்தை என்று கூறி தீவிரவாதிகளுக்கு தேவைக்கு அதிகமான சுதந்திரத்தை வழங்கி விட்டது என்றும் அவர் [illegible]

(ஐ-எ-6)

## பாடசாலைகளில்

தென்மராட்சி, நவ. 1

விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பின் சமூக மேம்பாட்டுப் பிரிவினரால் பளை தர்மக்கேணி சுகந்தன் பாலர் பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்படும் விளையாட்டுப் போட்டிகள் இன்று செவ்வாய் பிற்பகல் 2-00 மணிக்கு பாலர் பாடசாலை மைதானத்தில் க. குலேந்திரராசா தலைமையில் நடைபெறும்.

இப்போட்டிகளின்முதன்மை விருந்தினராக பளை கல்விக் கோட்ட பிரதிப் பணிப்பாளர் ப. அரியரத்தினம் கலந்து கொள்வார். (இ-117)

## ஜனாதிபதியின் செயலாளர் மெக்ஸிகோவில்!

கொழும்பு, நவ. 1

ஜனாதிபதி விஜேதுங்காவின் செயலாளர் திரு. கே. எச். ஜே. விஜேதாஸா மெக்ஸிகோவில் உத்தியோக விஜயம் ஒன்றை தற்போது மேற்கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை அவர் கொழும்பு திரும்புவார் என்று அரசு அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஒ-எ)

## விளையாட்டு நிகழ்வு

யாழ். மாவட்டப் பாடசாலைகள் விளையாட்டு அபிவிருத்திக் குழு 15 வயதுக்கு உட்பட்ட அணிகளுக்கிடையே நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று யாழ்.இந்துவில் நடைபெறவுள்ள ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

★ ஸ்கந்தா எதிர் சென் ஜேம்ஸ் ம.வி.

★ புங்குடுதீவு ம.வி. எதிர் இணுவில் மத்திய கல்லூரி.

★ ஏழாலை ஸ்ரீ முருகன் எதிர் மானிப்பாய் இந்து.

காமினி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிரசாரப் பணிகளை முடித்துக் கொண்டு பிரதமர் சந்திரிகா கொழும்பு திரும்பியதும் இந்தக் கடிதம் அவரிடம் கையளிக்கப்படும் என்று பிரதமரின் அலுவலகப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். ([illegible])

## கொலையாளியின் காலில் கொலுசு காணப்பட்டதா?

கிராண்ட்பாஸ் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் குண்டை வெடிக்க வைத்தவர் எனச் சந்தேகிக்கப்படும் பெண் தமது கால்களில் கொலுசு அணிந்திருந்தாரா?

குண்டு வெடிப்பு இடம் பெற்ற இடத்தில் காணப்பட்ட கொலுசுடனான இடதுகால் இனந்தெரியாத பிரஸ்தாப பெண்ணுடையதா என்பது குறித்து இரகசியப் பொலிஸார் தீவிர விசாரணையில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

இது விடயத்தில் வைத்திய நிபுணர்களின் உதவியும் பெறப்பட்டுள்ளது. (ஓ)

கல்முனை - திருமலை இடையே

## 10 மணி நேர பஸ்பயணத்தில் 20 சோதனை நிலையங்கள்

கொழும்பு, நவ.01

கல்முனையில் இருந்து திருமலை செல்லும் வழியில் பயணிகள் படையினரின் இருபது சோதனை நிலையங்களில் சோதனைக்காக வாகனங்களில் இருந்து இறங்கி ஏறும் துர்ப்பாக்கிய நிலை இருந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

10 மணி நேர பயணத்தின் போது 20 சோதனை நிலையங்களை தாண்டுவதில் பயணிகள் சலிப்படைந்து அதிருப்தியுறுகின்றனர்.

கடந்த காலங்களில் தளர்த்தப்பட்டிருந்த சோதனை நடவடிக்கைகள் சமீபத்தில் மீண்டும் தீவிரமாக்கப்பட்டுள்ளன.

காலை 7 மணிக்கு கல்முனையில் இருந்து புறப்படும் பஸ் மாலை 5 மணிக்கு திருமலையை சென்றடைகிறது. அதனிடையில் சுமார் நான்கு மணி நேரத்தை சோதனைக்காக இறங்கி நடப்பதில் செலவிட வேண்டியுள்ளது. சோதனை நிலையங்களில் படையினரின் கெடுபிடிகளையும் அனுபவிக்க வேண்டி உள்ளது. (ஐ)

ஐ. தே. க. முன்னாள் அமைச்சரான

## வின்சன்ட் பெரேராவின் புதல்வியும் பலியானார்!

கொழும்பு, நவ. 01

கிராண்ட்பாஸ் குண்டுத் தாக்குதல் சம்பவத்தில் உயிரிழந்தவர்களில் முன்னாள் ஐ. தே. க. அமைச்சராக இருந்த வின்சென்ட் பெரேராவின் புதல்வி திருமதி பேர்ள் நிபோனின் ராஜபக்ஸாவும் ஒருவர் என்று தெரிவிக்கப்படுகிறது.

17 வயது சிங்கள சினிமா நடிகை சம்பா டில்ரங்கி பிரிஸ்டும் கொல்லப்பட்டவர்களில் ஒருவராவர்.

சிங்கள சினிமாவின் புது முகமான இவர் நடித்த இரு படங்கள் விரைவில் திரையிடப்படவுள்ளன.

இவரின் முதலாவது படம் [illegible]மலர்கள் ஆகும். இரண்டாவது படம் இன்ஸ்பெக்டர் சம்பா இப்படத்தில் பெண் பொலீஸ் அதிகாரியாக இவர் நடித்துள்ளார். (ஓ)

குண்டு வெடிப்பில்

## காயமுற்ற ஐவரின் நிலை மிகவும் கவலைக்கிடம்!

கொழும்பு, நவ. 1

கிராண்ட்பாஸ் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் காயமடைந்தவர்களில் ஐ. தே. கட்சியின் கொழும்பு மாவட்ட எம்.பியான ஒஸி அபயகுணசேகரா உட்பட 5 பேரின் நிலைமை மிகவும் கவலைக்கிடமாக இருப்பதாக கொழும்பு பெரியாஸ்பத்திரி வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

காயமடைந்தவர்களில் இன்னும் 18 பேர் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (அ-9)

## கேகாலையில் பொலிஸ் மீது தாக்குதல்

கொழும்பு, நவ. 1

கேகாலையில் உள்ள அந்திரியமடப் பகுதியில் கொள்ளைக் கோஷ்டி ஒன்று பொலிஸ் குழு ஒன்றின் மீது நடத்திய தாக்குதலில் பொலிஸார் ஒருவர் உயிரிழந்தார். கான்ஸ்டபிள்கள் நால்வர் படுகாமடைந்தனர்.

இச்சம்பவம் தொடர்பாகப் பொலிஸார் விசாரணை நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-ஐ)

குண்டு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிராண்ட்பாஸ் தாக்குதலில் 13க்கு அதிகமான போல் பியரிங்குகள் (Ball Bearings) காமினியின் மார்பை துளைத்துச் சென்று அவரை பலி வாங்கின. (ஐ-எ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உ

தமிழீழ மக்களின் விடுதலைக்கு
இந்திய அரசின் செயற்பாடு
சாதகமாக அமைய இறையருள் வேண்டி

## விடி விளக்குகள் - 108

இடம்: சுழிபுரம் - பறாளாய் ஈசுர விநாயகர் தேவஸ்தானம்
காலம்: 06 – 11 – 1994 ஞாயிறு
சதுர்த்தித் திருவிழா அன்று
இரவு 7.00 மணியளவில்

★ அனைவரையும் அழைக்கின்றோம் ★

சோழியூரான்
பிறைசூடிக் குரு
(சந்ததிப் பூசகர்)

[33597]



தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்
யாழ். மாவட்டம்

## ஆண்டிறுதி பொது கூட்டம்

மேற்படி கூட்டம் கோட்ட ரீதியாக நடைபெற்று புதிய நிர்வாகசபை தெரிவு இடம்பெறவுள்ளது.

தென்மராட்சி கோட்டம்
04 – 11 – 1994 (வெள்ளி) பி. ப. 3-30மணி
சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி

வடமராட்சி கோட்டம்
07 – 11 – 1994 (திங்கள்) பி. ப. 3-00 மணி
சதா பொண்ட்ஸ் கல்விநிலையம்
மாலுசந்தி

மருதனார்மடம் கோட்டம்
09 – 11 – 1994 (புதன்) பி. ப. 3-00மணி
இணுவில் மத்தியகல்லூரி

யாழ். கோட்டம்
11 – 11 – 1994 (வெள்ளி) பி. ப. 3-00மணி
புதிய விஞ்ஞான கல்விநிலையம்
யாழ்ப்பாணம்

பண்டத்தரிப்பு கோட்டம்
14 – 11 – 1994 (திங்கள்) பி. ப. 3-00மணி
சுப்றா கல்வி நிலையம்
சித்தன்கேணி

★ அனைத்து உறுப்பினர்களினதும் வரவு கண்டிப்பாக கவனிக்கப்படும்.
★ கூட்டம் நடைபெறும் நாட்களில் அக்கோட்ட நிறுவனங்கள் அனைத்தும் மாலையில் மூடப்பட்டிருக்கும்.

- பொதுச்செயலாளர்.
யாழ். மாவட்டம்.

(சி/9571)



"நோயாளர் நலன்புரிச் சங்கம்"
அளிக்கும்
தீபாவளிக் கதம்பம்

## நிதியுதவி நிகழ்ச்சி

இடம்:- கைலாசபதி கலையரங்கம்
யாழ். பல்கலைக் கழகம்.
காலம்:- 02-11-1994 நாளை (புதன்கிழமை)
நேரம்:- மாலை 5.00 மணி

ஆதரவளித்தவர்கள்
அன்புடன் அழைக்கப்படுகிறார்கள்.
நன்றி

(33603)



தீபாவளியை முன்னிட்டு
மாட்டிறைச்சி, ஆட்டிறைச்சி

## மலிவு விற்பனை

மாட்டிறைச்சி தரமானது 1 கி 90/–வும்
1 கி 70/–வும்
ஆட்டிறைச்சி பார்வைக்கு கட்டப்பட்ட
சுத்தமானதும், தரமானதும்
கிடாய் இறைச்சி 200/–

உரிமையாளர் விஜயன்
சாந்தமணி (சேகர்)

மத்தியசந்தை,
சுன்னாகம்.
(7691)


## இதய அஞ்சலி

மக்கள் நலன் காக்கும் பிரிவின் பொருளாளர்
**திரு. வே. பே. செல்லையா**
அவர்கள்

அமரத்துவம் எய்தியதையிட்டு எமது இதய அஞ்சலிகளைச் செலுத்தி நிற்கின்றோம்.

எமது அமைப்பில் கடந்த ஐந்து வருடங்களுக்கு மேலாக ஆரம்ப கால உறுப்பினராக இருந்து, கடந்த இரு வருடங்களுக்கு மேலாக பொருளாளராக இருந்து தொண்டு மனப்பான்மையுடன் நற்சேவையாற்றி வந்த சமூக சேவையாளனை, சிறந்த பண்பாளனை இன்று இழந்து தவிக்கின்றோம்

அன்னார் இறைபதம் எய்தியமையை அறிந்து எமது துயர் தோய்ந்த இதய அஞ்சலிகளைத் தெரிவிக்கின்றோம்.

— மக்கள் ந[illegible] பிரிவு.
இருபாலைச்சந்தி, கோப்பாய்
(33598)

யாழ். மாவட்டத்தில்

# அங்கவீனமடைந்தோருக்கு உதவும் கருவி வழங்கப்படும்

வலிகாமம் தெற்கு நவ 01

யாழ். மாவட்டத்தில் பல்வேறு காரணங்களினால் அங்கவீனமடைந்துள்ளவர்களுக்கு முச்சக்கர வண்டிகளும், சக்கர நாற்காலிகளும் மற்றும் காது கேட்கும் கருவிகளும் வடக்கு—கிழக்கு சமூக சேவைத் திணைக்களத்தினால் வழங்கப்படவிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணம், வேலணை, சங்கானை, சண்டிலிப்பாய், உடுவில், தெல்லிப்பழை, கோப்பாய்பருத்தித்துறை, மருதங்கேணி, சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவுகளில் உள்ள அங்கவீனர்களுக்கே இவை வழங்கப்படவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களுக்கான முச்சக்கர வண்டிகள், சக்கரநாற்காலிகள் மற்றும் காது கேட்கும் கருவிகளை வந்து பெற்றுக் கொண்டு போய் விநியோகிக்கும் படி யாழ்.சமூக சேவைத் திணைக்களத்தை வடக்கு—கிழக்கு மாகாண சமூக சேவைத் திணைக்களம் கேட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (எ-152)

யாழ்ப்பாணத்தில்

# தமிழ்மொழிக் கல்விகல்லூரி நிறுவுமாறு கோரிக்கை

யாழ்ப்பாணத்தில் தமிழ் மொழி மூலமான கல்விக் கல்லூரி ஒன்றை ஆரம்பிக்க வேண்டும் என்ற கோரிக்கை சாதகமாகப் பரிசிலனை செய்யப்படும் என்று கல்வி அமைச்சர் றிச்சர்ட் பதிரான உறுதியளித்துள்ளார்.

அண்மையில் ஆசிரிய சங்கங்களின் சம்மேளனத்தில் அங்கம் வகிக்கும் ஆசிரிய தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் அமைச்சரைச் சந்தித்து பலதரப்பட்ட விஷயங்கள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தினர்.

அச்சமயம் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சார்பில் அதன் பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம் யாழ்ப்பாணத்தில் தமிழ் மொழி மூலமான கல்விக் கல்லூரி ஒன்றை அமைக்க வேண்டியதன் அவசியத்தை அமைச்சரிடம் வலியுறுத்தினார்.

இலங்கையில் தமிழ் மொழிக் கல்விக் கல்லூரிகள் இல்லை என்பதை அமைச்சருக்குச் சுட்டிக் காட்டிய திரு. மகாசிவம், மட்டக்களப்புக் கல்விக் கல்லூரியை உடனடியாக ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கும் படியும் கேட்டுக் கொண்டார்.

இது நீதியான கோரிக்கை என்று ஏற்றுக் கொண்ட அமைச்சர், தமது அமைச்சு இதனை சாதகமாக பரிசீலனை செய்யும் என்று தூதுக் குழுவுக்கு உறுதியளித்தார். (எ)

## மரக்கன்று விநியோகம்

யாழ்ப்பாணம், நவ. 1

கொடிவார மரநடுகையையொட்டி சுன்னாகம் மயிலணி சைவ மகா வித்தியாலய மாணவர் விவசாய முன்னேற்றக் கழகம் வழமைபோல் இவ்வாண்டிலும் பலவகை மரக்கன்றுகளை பாடசாலைகளுக்கும் விநியோகிக்கின்றது. (இ)

குண்டுவீச்சில் சேதமடைந்த

# சென்.ஜேம்ஸ் ஆலயத்தை விரைவில் திருத்த ஏற்பாடு

## சிமெந்து எடுத்துவர அனுமதி

குருநகர், நவ. 01

விமானக் குண்டுவீச்சுக்கு இலக்கான குருநகர் சென். ஜேம்ஸ் தேவாலய திருத்த வேலைகளுக்கு 2 ஆயிரத்து 500 சிமெந்துபைக்கற்றுகளும் 800 அஸ்பெஸ்டஸ் சீற்றுகளும் எடுத்துவர கூட்டுப் படை தலைமையகம் அனுமதி வழங்கி இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். அரசஅதிபரின் முயற்சியால் அனுமதி கிடைத்திருக்கும் மேற்படி பொருள்கள் பகுதி பகுதியாக வழங்கப்படுவதாகவும்.

முதலில் 200 பைக்கற் சிமெந்தும், 600 அஸ்பெஸ்டஸ் சீற்றுகளும் எடுத்துவரப்பட இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை தேவாலய திருத்த வேலைகளுக்காக உள்ளூரில் 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதி சேகரிக்கப்பட்டிருப்பதாகவும்.

ஆயல் பங்குத்தந்தை வண. ஆர். எம் ஜீ. நேசநாயகம் அடிகள் வெளிநாடுகளில் இதுவரை 13 லட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதி சேகரித்து இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-31)

# தேர்தலுக்கு முன் வெளியிட சுவையான பல தகவல்கள்

## ஏ. ஜே. ரணசிங்கா கூறுகிறார்

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பு வெளியிட பல சுவையான தகவல்கள் தம்மிடம் இருப்பதாக சுயேச்சை வேட்பாளர் ஏ.ஜே. ரணசிங்கா தெரிவித்தார்.

''நான் சொல்லப் போகும் தகவல்கள் இரகசியங்களை வெளிப்படுத்தும். மற்றவர்கள் கூறப்போகும் தகவல்கள் விஷயங்களை மூடி மறைப்பதாகவே இருக்கும்—'' இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார்.

இப்போது ஐக்கிய தேசியக் கட்சி ரணில் எதிர்ப்புக் கட்சியாக மாறி உள்ளது என்று தெரிவித்த அவர், நேர்மையான தலைவரான ரணில் விக்கிரமசிங்காவை அரசியலில் இருந்து துரத்தச் சதி மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவித்தார். (எ)

## ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், நவ 1

எழுதுவினைஞர் தரம்- II 'ஏ' பிரிவினருக்கான பதவி உயர்வுப் பரீட்சையும் — நிர்வாகசேவை வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையும் எதிர்வரும் 19 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டிருப்பதாக யாழ். மேலதிக அரச அதிபர் அறிவித்துள்ளார். (ஐ)

# கூரே கேட்டதால்தான் பாதுகாப்பு தரப்படுகிறது!

## அமைச்சர் தர்மசிறி தகவல்

முன்னாள் அமைச்சர் சிறிசேன கூரே கேட்டுத்தான் அரசு அவருக்கு பாதுகாப்பை வழங்கியுள்ளது.

அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா முன்கண்டவாறு செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

சிறிசேன கூரே தமது உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதால்தான் அவர் தமக்கு பாதுகாப்பைக் கேட்டுள்ளார் என்றும் அவர் கூறினார்.

''பிரதமர் சந்திரிகாவின் பாதுகாப்பையும் அதிகரித்துள்ளோம். எவருக்கு அச்சுறுத்தல் எங்கிருந்து வருகின்றது என்பதை நாம் எப்படி அறிவோம்'' என்றும் அவர் கூறினார். (ஒ-எ)

# 260 ரூபா விசேட படி ஓய்வூதியருக்கு கிடைக்கும்

கொழும்பு, நவ. 1

ஓய்வூதியம் பெறுவோர் விசேட வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவாக 260 ரூபாவைபெற்றுக் கொள்வார்கள். இந்த தொகை 1988 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கமான காலத்திற்கு வழங்கப்படவிருக்கிறது.

இந்தக் கொடுப்பனவில் வழங்கப்படாமல் இருக்கும் நிலுவைத் தொகை வருடத்தின் முதல் 5 மாதங்களுக்காக வழங்கப்படும் என்று அமைச்சரவைப் பேச்சாளர் தர்மசிறி சேனநாயக்கா தெரிவித்தார்.

36 கோடி 10 லட்சம் ரூபாவை இதற்கென ஒதுக்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம்வழங்கியுள்ளது.

இந்த விசேட வாழ்க்கைச் செலவுக்கொடுப்பனவு சில காலமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. ஓய்வூதியம் பெறுவோர் விடுத்த வேண்டுகோளைத் தொடர்ந்து முன்னைய அரசாங்கம் இதனை கடந்த ஜூலை மாதத்திலிருந்து வழங்க முடிவு செய்திருந்தது. (ஐ-4)

## ஹமில்டனுக்கு சேவை நீடிப்பு

கொழும்பு, நவ. 1

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்காவுக்கு அடுத்த ஆண்டு ஒகஸ்ட் 16 ஆம் திகதி வரை சேவை நீடிப்பு வழங்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாதுகாப்பு அமைச்சுச் செயலாளராக தொடர்ந்து பணியாற்றுவீர்களா என்று செய்தியாளர் கேட்டதற்கு—

''என்னைப் பதவியில் இருந்து போகும்படி எவரும் கோரவில்லை''— என்று ஜெனரல் வனசிங்க பதிலளித்தார். (ஐ-எ)

# நாட்டுக்கான அடித்தளத்தை அமைப்பதற்கான சகல நில, நீர், மனித வளங்களும் எம்மிடம் உண்டு

## சவுக்குக்காடு வளர்ப்பு நிகழ்வு வைபவத்தில் ரவி உரை

எமது தேசத்தில் போதிய நில, நீர், மனித பொருள் வளமுண்டு. இவற்றை வைத்துக் கொண்டு எமது நாட்டுக்கான அடித்தளத்தை இடுவதுதான் இன்றைய பிரச்சினை ஆகும்.

இவ்வாறு தமிழ் ஈழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. ரவி தெரிவித்தார்.

200 ஏக்கர் சவுக்கம் காடு வளர்ப்புத் திட்டத்தின் வேரூன்றும் நாள் நிகழ்ச்சி வைபவத்தில் அவர் பேசினார்.

மணல்காடு சூழல் பாதுகாப்பு நிறுவன சவுக்கம் காடு வளர்ப்புத் திட்டத்தில், சூழல் பாதுகாப்புப் பகுதி பொறுப்பாளர் திரு. மு. உமைநேசன் தலைமையில் இந்த வைபவம் நடைபெற்றது.

திரு. ரவி மேலும் பேசியதாவது;

தமிழ் ஈழ போராட்டம்உத்வேகம் அடைந்த கடந்த காலத்தில் எதை வைத்து ஈழத்தில் வாழப் போகிறீர்கள் எனப் பலரும் கேட்டார்கள். அந்நேரத்தில் அவர்களுக்கு அவநம்பிக்கையும் இருந்தது. நாமும் பதில் சொல்ல முடியாது மௌனிகளாக இருந்தோம்.

ஆனால் வேலைத்திட்டங்களைத் திட்டி செயல்படுத்திய போது தான் சகல வளங்களும் உண்டு என்பதை எம்மால் உணரமுடிந்தது.

மணற்பாங்கான இந்தப் பிரதேசத்தில் யாராவது காலத்தை வீணாக்குவார்களா என்ற எண்ணம் எங்களின் அறியாமையினால் முன்னர் இருந்து வந்தது.

ஆனால் இம்மணல் பிரதேசத்தில் போதிய பலன் இருக்கிறது. இதனை ஆயவு செய்தால் கோடிக்கணக்கான ரூபாக்களை வருமானமாகப் பெறலாம்.

கடந்த 1976 ஆம் ஆண்டு மணல் காட்டில் சவுக்கு மர வளர்ப்புத் திட்டத்தை முன்னாள் எம். பி. திரு. துரைரத்தினம் ஆரம்பித்து இத்திட்டத்துக்கு கருவூட்டினார்.

இன்று பாரிய திட்டமாக இது உருவெடுத்து எமக்கு நம்பிக்கையை ஊட்டிக் கொண்டிருக்கிறது.

### விறகுத் தேவை பூர்த்தி

25 ஆயிரம் ஹெக்டர் பரப்பு நிலம் இங்குண்டு. ஆயிரம் ஏக்கரில் சவுக்கு காடு வளர்த்தால் யாழ். மாவட்டத்துக்கான விறகுத் தேவை பூர்த்தியடையும்.

சவுக்க மரங்களைவிட இங்கு தென்னை, தேக்கு ஆகியவற்றையும் பயிரிடலாம். இவற்றுக்கு கோடிக் கணக்கான நிதி தேவை. இதற்கான நிதி கிடைக்கும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

ஆயிரம் ஏக்கர் திட்டத்தில் முதலில் 200 ஏக்கரில் சவுக்கு நடுகை தான் இப்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இயக்கத்துக்கு தேவைகள் இருந்தபோதிலும் இங்கு கிடைக்கும் வருமானம் இத்திட்டத்துக்கே பயன்படுத்தப்படுகிறது.

தென்னைச் செய்கையிலும் பல லட்சம் ரூபாய்களை வருமானமாகப் பெறமுடியும்.

அரசு விதித்த பொருளாதாரத் தடையினால் நாம் இன்று பல்வேறு துறைகளில் வளர்ந்துள்ளோம்.

இப்படி அவர் கூறினார்.

யாழ். செயலகத் திட்டப் பணிப்பாளர் திரு. செ. பத்மநாதன் உட்பட மற்றும் சிலரும் உரை நிகழ்த்தினார்கள்.

இத்திட்டத்தில் முதலாவது கன்றை கடற்புலிகளின் விசேட தளபதி திரு. சூசையும் —

இரண்டாவது கன்றை மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் திரு. பொன். தியாகமும் —

மூன்றாவது கன்றை யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதியும் நட்டார்கள். அதனைத் தொடர்ந்து திணைக்கள உத்தியோகத்தர்களும் பொதுமக்களும் கன்றுகளை நட்டார்கள். தென்னைமரங்களும் நடப்பட்டன.

ஆரம்ப வைபவத்தில் யாழ். மேலதிக அரச அதிபர் திருமதி ப. திலகநாயகம்போல் மங்கள விளக்கேற்றினார்.


## காணவில்லை

கோண்டாவில் மேற்கு, பாரதி வீதியைச் சேர்ந்த
**கந்தையா திருச்செல்வம் (செல்வம்)**

11. 10. 94 அன்று முதல் காணவில்லை. வயது இருபத்தி ஆறு. உயரம் 5அடி, பொது நிறம். வீட்டில் இருந்து புறப்படும் போது அரைக் காற்சட்டையுடன் புறப்பட்டுள்ளார். இவரைக் கண்டால் அதே விலாசத்துக்கு கொண்டு வரவும். சன்மானம் வழங்கப்படும்.

பாரதி வீதி, கோண்டாவில் மேற்கு

(7690)



யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலை
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

## ஆண்டுப் பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, பாடசாலை அபிவிருத்திச்சங்கத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டம் **13-11-1994** ஞாயிற்றுக்கிழமை மு. ப. 9. 30 மணிக்கு கல்லூரி தம்பையா மண்டபத்தில் நடைபெறும்.

பெற்றோர் அனைவரும் தவறாது சமுகம் தரவும்

S- சிவராசா
செயலாளர்

யாழ்ப்பாணம்.
01- 11- 1994
(சி/9573)


# மூலிகை மருந்துகளின் முக்கியத்துவம் மேலை நாடுகளிலும் உணரப்படுகிறது

## சித்த வைத்திய வைபவத்தில் உரை

யாழ்ப்பாணம், நவ. 1

வளர்ந்துவரும் விஞ்ஞான உலகத்தில் இரசாயன மருந்துகளின் தீயவிளைவுகளினால் மூலிகை மருந்துகளின் முக்கியத்துவம் மேலை நாடுகளிலும் உணரப்படுகிறது அறியக்கூடியதாக இருக்கிறது.

வடமாநில பனை தென்னை வள கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திரு. சி. சுபாரத்தினம் மேற்கண்டவாறு கூறினார்.

சித்த வைத்திய ஆராய்ச்சி நிலையத்தில் அண்மையில் நடைபெற்ற சித்தவைத்திய சுகாதாரத் தொண்டர்களாக வெளியேறுவோருக்கு சான்றிதழ் வழங்கும் [illegible] முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு [illegible]

சித்த வைத்திய ஆராய்ச்சி நிலையத் தலைவர் வைத்தியப் பேராறிஞர் கே. பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது :

மூலிகைகள் தாராளமாகக் கிடைக்கக்கூடிய பகுதியில் நாம் வாழுகின்றோம். எமது பனை தென்னை வளகூட்டுறவுச் சங்கங்கள் மருந்து உற்பத்தியிலும் சித்த வைத்திய ரீதியில் சுகாதாரத்தைப் பேணுவதிலும் கடந்த சில வருடங்களாக பணியாற்றி [illegible]

சங்க அங்கத்தவர்களின் [illegible] இருந்து தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கு சுகாதாரத் தொண்டர் பயிற்சியும் பின்னர் மருந்தாளர் பயிற்சியும் வழங்கப்பட்டது. தற்போது அதில் திறமையான மாணவர்களுக்கு வைத்தியப் பயிற்சியும் இன்று ஆரம்பிக்கப்படவுள்ளது என்றார்.

இவ்வைபவத்தில் மூன்றாவது சித்த வைத்திய சுகாதாரத் தொண்டர்களுக்கு பயிற்சிச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டதுடன் மூன்றாவது அணி வைத்திய மாணவர்களுக்கு பயிற்சியையும் சித்த வைத்தியக் கூட்டுறவுத் தலைவரும் ஆராய்ச்சி மன்றத்தின் பதிவாளருமான திரு. சி. சுபாரட்ணம் ஆரம்பித்து வைத்தார். இறுதியில் ஆராய்ச்சி மன்றத்தின் செயலாளர் வைத்திய கலாநிதி செ. து. சண்முகராசா நன்றி உரை கூறினார். (க-4)


யா/புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்
பழைய மாணவர் சங்கம்

## வருடாந்த பொதுக்கூட்டம்

காலம்: 1994—11—05 சனிக்கிழமை பி. ப. 3 மணி
இடம்: வித்தியாலய மண்டபம்

பழைய மாணவர்கள் (தற்பொழுது கல்லூரிகளில் கல்வி பயிலும் மாணவர்கள் தவிர்ந்த) அனைவரையும் தவறாது சமுகம் தரும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

செயலாளர்,
பழைய மாணவர் சங்கம்.

[33591]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்**
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## முழுமையான இசைவு பெறுக

தென்னிலங்கையில், பொதுத் தேர்தலோடு சிங்கள மக்கள் மத்தியில் முன்னெடுக்கப்பட்ட புதிய சிந்தனைப் போக்கை மாற்றி, அவர்களைப் பழைய இனவாத வழிக்கு இட்டுச் செல்லாமல் தடுப்பது அவசியம். சந்திரிகா அணியின் பிரசார உத்தியிலும் அதனை நடைமுறைப்படுத்தி வெற்றி காண்பதிலுமே அது தங்கி உள்ளது.

இவ்வாறு நேற்று இப்பத்தியில் சுட்டிக்காட்டி இருந்தோம். அதனை எழுதிய மை காய்வதற்குள்ளேயே, புதிய அலையை பழைய வெள்ளம் வந்து அள்ளிச்செல்லாமல் தடுக்கக்கூடிய வல்லமை தனக்கு உண்டு என்பதை சந்திரிகா ஓரளவுக்கு நிரூபித்திருக்கிறார். ஞாயிற்றுக்கிழமை மாலை சந்திரிகா ஆற்றிய தொலைக்காட்சி உரையில், இனவாத அரசியலுக்குத் தாம் இடம் அளிக்கப்போவதில்லை என்பதை எடுத்துச் சொல்லியிருக்கிறார்.

உண்மைகள் நாட்டின் அரசியல் தலைவரின் வாயால் வரும்போது, அவை மக்களிடையே விரைந்து பதியும் என்பதில் ஐயமில்லை. அதுவும் சிங்கள மக்களின் அபிமானம் பெற்ற, அவர்களின் நம்பிக்கைக்குரிய புதிய தலைமுறைத் தலைவராகிவிட்ட சந்திரிகா இனவாதத்தின் ஆரம்பத்தையும், அதன் கொடுமைகளையும், அந்தக் கொடுமைகளுக்குக் காவலாக இருந்தவர்களையும், இனவாதம் நாட்டை இப்போது எங்கே கொண்டுவந்துவிட்டுள்ளது என்பதனையும் மிக ஆணித்தரமாக எடுத்து விளக்கி இருக்கிறார்.

தமிழர்களின் ஜனநாயக, அடிப்படை மற்றும் உரிமைகள் மறுக்கப்பட்டமை, அவற்றை வழங்குமாறு தமிழர்கள் சாத்வீக முறையில் போராடியமை, அந்தப் போராட்டங்களை சிங்கள அரசுகள் இராணுவ அடக்குமுறையினால் நசுக்கியமை, அரசாங்கப் பயங்கரவாதம் தமிழர்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டமை, அதன் விளைவாக தமிழர்கள் ஆயுதம் ஏந்திப் போராட நிர்ப்பந்திக்கப்பட்டமை, நாடு இன்றைய சீரழிந்த நிலைமைக்கு வருமளவுக்கு போரைத் தொடர்ந்து நடத்தியமை ஆகிய விடயங்களை பிரதமர் சந்திரிகா மிகத் துலாம்பரமாக, துணிச்சலுடன் சிங்கள மக்களுக்கு விளக்கியுள்ளார்.

ஜே. ஆர். ஜெயவர்த்தனா தொடக்கிவிட்ட இனவாதப் போரை பிரேமதாசா, காமினி தலைமைகள் மேலும் தீவிரப்படுத்தியதை அவர் எடுத்துக் கூறியுள்ளார். கொலைகார அரசியல் கலாசாரத்தைத் தோற்றுவித்தது ஜே. ஆர். அரசே என்பதனையும், "பூமராங்" போல அதே கலாசாரம் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர்களையே திருப்பி வந்து தாக்கி அழித்திருப்பதையும் காணலாம்.

சந்திரிகாவின் இந்த உண்மையை அம்பலப்படுத்தும் உரை, தமிழர் தரப்புத் தலைவர் ஒருவர் இதுவரை நடந்தவற்றைக் கூறுவது போல அமைந்துள்ளது. பிரதமரே உண்மைகளைப் புட்டு வைப்பதால் சிங்கள மக்கள் இதுவரை நடந்த கொடுமைகளை பொறுப்பான ஒருவரிடமிருந்து வரும் தகவல்களாக உள்வாங்கும் சாத்தியம் நிறையவும் உண்டு.

தமிழ் மக்களின் போராட்டத்தை, அவர்களின் கோரிக்கைகளை அடுத்த பக்கத்தால் காட்டி இனவாதத்தை வளர்த்தவர்களுக்கு, அதனை மீண்டும் தட்டி எழுப்ப முயல்பவர்களுக்கு சந்திரிகா கொடுத்தது- உறைப்பான சாட்டையே!

ஆனால் பிரதமர் அதனோடு நிற்காமல் தமிழர் பிரச்சினைக்கு நியாயமான அரசியல் தீர்வையே முன்வைக்கப் போவதாகவும் இராணுவத் தீர்வு என்பதனை நினைத்தும் பார்க்கப் போவதில்லை என்பதனையும் சிங்கள மக்களுக்குச் சொல்லி அவர்களின் ஆணையைப் பெறவேண்டும். இது இல்லாவிடில் அது என்று தமது சகபாடிகள் சிலர் கூறுவதைப் போலன்றி, அரசியல் தீர்வு மட்டுமே என்ற நிலைக்குச் சிங்கள மக்களை முழுமையாக இசைவு படுத்த வேண்டும்.

# சென்னையில் கடும் புயல்!

# 15 பேர் வரை உயிரிழப்பு!!

## இயல்பு நிலை பாதிப்பு

சென்னை, நவ. 1

சென்னைக் கரையை நேற்று அதிகாலை கடந்த கடுமையான புயல் காற்றினால் சென்னை நகரிலும் புறநகர்ப்பகுதிகளிலும் இயல்பு நிலை பாதிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

மின்சாரம் தாக்கியதாலும் இடிபாடுகளிலும்சிக்கி குறைந்தது 15 பேர் பலியாகினர்.

புளியந்தோப்பு என்ற இடத்தில் குடிசை மாற்று வாரியக் கட்டடம் ஒன்று இடிந்து வீழ்ந்தது. அங்கிருந்து ஐந்து சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

சென்னை நகரிலும் அண்டிய பகுதிகளிலும் தாழ்வான பகுதிகளில் வெள்ளம் தேங்கி நிற்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பெரும் எண்ணிக்கையான மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு கொண்டு செல்லப்படுகின்றனர்.

ரயில் மற்றும் வீதிப் போக்குவரத்துக்கள் துண்டிக்கப்பட்டுள்ளன. நகரிலும் மற்றும் இடங்களிலும் அனைத்து கல்வி நிலையங்களும் மூடப்பட்டுள்ளன.

வீதிகளில் கண்டபடி மரங்களும் மின்கம்பங்களும் சரிந்து வீழ்ந்துள்ளன தடைகளை அகற்றும் பணி ஆரம்பமாகியுள்ளன.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவுப் பொட்டலங்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

பாதிக்கப்பட்ட பெரும் எண்ணிக்கையான மக்கள் பொது இடங்களில் தஞ்சம் புகுந்துள்ளனர். (ஓ)

## ரணிலை மிரட்டிய சம்பவம்; பொலீஸார் விசாரணை!

கொழும்பு, நவ. 1

கடந்த வாரம் ஐ.தே.க. தலைமையகமான ஸ்ரீகோதாவுக்கு அருகில் வைத்து காமினியின் ஆதரவாளர்களால் முன்னாள் பிரதமர் ரணில் மிரட்டப்பட்ட சம்பவம் தொடர்பாக பொலீஸார் விசாரணை ஒன்றை ஆரம்பித்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

விசாரணையின் ஒரு கட்டத்தில் ரணிலின் வாக்குமூலத்தை பொலீஸார் பதிவு செய்ய வேண்டி வரும் என்று பொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ரணிலை மிரட்டிய நபர்களில் சிலரை அடையாளங் காண முடியும் என்றும் பொலீஸார் தெரிவித்தனர்.

## ஒஸியின் உடல்நிலை பற்றி வதந்தி பரப்பப்படுகிறதாம்

கொழும்பு, நவ. 1

ஒஸி அபயகுணசேகராவின் உடல் நிலைகுறித்து அவரது எதிராளிகள் பரப்பி வரும் வதந்திகள் குறித்து கவலையும் ஏமாற்றமும் அடைவதாக, அவரின் குடும்பத்தினர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"ஒஸி அபயகுணசேகரா இயல்பாகவே துணிச்சலும் வீரமும் நிறைந்தவர். அதற்கேற்ப அவர் ஆஸ்பத்திரிப் படுக்கையில் இருந்தபடி போராட்டம் நடத்திக் கொண்டிருக்கின்றார்"— என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவரின் உடல்நிலையில் முன்னேற்றம் அடைய இறைவனைப் பிரார்த்திக்கும் படி அனைவரையும் வேண்டுவதாகவும் அவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (ஓ-எ)

## கணவரை கொன்றோரை எனக்குத் தெரியாது

### சிறிமா திஸாநாயக்கா கூறுகிறார்

கொழும்பு, நவ. 1

யார் என் கணவரைக் கொன்றார்கள் என்று தெரியவில்லை. யார் அவர்கள் என்பதைக் கண்டுபிடித்து நீதி முன் நிறுத்த நடவடிக்கை எடுப்பேன்.

ஐ.தே.க. ஜனாதிபதி வேட்பாளர் திருமதி காமினி திஸாநாயக்கா முன்கண்டவாறு செய்தியாளரிடம் தெரிவித்தார்.

ஜனாதிபதி வேட்பாளராக வருவதற்கு ஏன் இணக்கம் தெரிவித்தீர்கள் என்று கேட்டதற்கு —

"எனது கணவரின் பணியைத் தொடர்ந்து செய்வதற்காகவே இதனை ஏற்றுள்ளேன். காமினியுடன் நான் நெருங்கி பழகி வந்துள்ளேன். எனக்கு அனுபவம் உண்டு. என்ன நடக்கின்றது என்பது எனக்குத் தெரியும். காமினிக்கு உள்ள திறமை என்னிடம் இல்லை. என்றாலும் அவரது பணியை முன்னெடுத்துச் செல்ல என்னால் முடியும்"— என்றார் அவர்.

தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் தாம் பேசுவதாக இல்லை என்றும் சிறிமா கூறினார். (எ)

## வேளாண் மன்னர் தெரிவு போட்டிக்கு அழைப்பு

யாழ்பாணம், நவ. 1

1994/95ஆம் ஆண்டுக்கான வேளாண் மன்னர் தெரிவுப் போட்டியில் பங்குபற்றுமாறு சகல நெற்செய்கையாளர்களுக்கும், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் சென்ற ஆண்டு தொடக்கம் நடத்தப்பட்டு வரும் இப்போட்டியில் வடதமிழீழத்தின் சகல மாவட்டத்திலுள்ள நீர்ப்பாச்சுகையின் கீழும், மழையை நம்பிய செய்கையிலும் ஈடுபட்டுள்ள நெற்செய்கையாளர்கள் பங்குபற்ற முடியும்.

இவர்களிடையே மாவட்ட ரீதியாக மிக கூடுதலான விளைவுகளை பெறும் செய்கையாளர்களுக்கு "வேளாண் மன்னர்" விருதும் விசேட பரிசில்களும் வழங்கப்படும். இப்போட்டியில் பங்குபற்ற ஆர்வமுள்ளோர் தேவையான விண்ணப்ப படிவங்களை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன முதன்மை செயலகம் மற்றும் மாவட்ட, கோட்ட, வட்ட அலுவலகங்களில் அல்லது கிராமிய உற்பத்திக் குழு விவசாய திணைக்களமும், கமநல சேவை திணைக்களம் பசுமை நிலையங்கள் ஆகியவற்றில் பெற்று எதிர்வரும் 10 ஆம் திகதிக்குள் விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

சென்ற வருடம் இப்போட்டியில் வெற்றியீட்டியோருக்கு தமிழீழ தேசியத் தலைவரால் வேளாண் மன்னர் விருதும் தங்கப்பதக்கங்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஓ)

## விபத்தில் இறந்து நாற்றமெடுத்த மாட்டை விற்க முயன்ற 2 பேருக்கு சிறைத்தண்டனை

வலிகாமம் தெற்கு, நவ. 1

விபத்துக்குள்ளாகி இறந்த மாடு ஒன்றினை மறுநாள் இறைச்சியுடன் கலந்து விற்பனை செய்வதற்காக உரித்துக் கொண்டிருந்த போது தகவல் கிடைத்த காவல்துறையினர் அவ்விடத்துக்கு விரைந்து இரு இளைஞர்களை கைது செய்து நீதிமன்றில் வழக்கு தொடர்ந்திருந்தனர்.

இவ்வழக்கை விசாரணை செய்த சுன்னாகம் மாவட்ட நீதிமன்ற நீதியாளர் திரு. செ. மயூரன் இரு இளைஞர்களுக்கும் தலா இருபது நாட்கள் சிறைத்தண்டனை விதித்தார்.

ஊரெழு பொக்கணை என்னும் இடத்தைச் சேர்ந்த மகாலிங்கம் முகுந்தன், ஆறுமுகம் சிவகுமார் என்ற இரு இளைஞர்களும் சுன்னாகம் கொத்தியாலடி மாட்டு தொழுவத்தில் வைத்து இவ்வாறான விபத்துக்குள்ளாகிய மாட்டினை விற்பனைக்காக உரித்ததாகவும்—

உரிக்கப்பட்ட மாட்டிறைச்சி பாவனைக்கு உதவாது நாற்றம் எடுத்து இருந்ததாகவும், இரு இளைஞர்கள் மீதான குற்றச் சாட்டில் குறிப்பிடப்பட்டிருந்தது. (இ-102)

# பிரேமதாஸாவைக் கொன்றவர்களை கண்டுபிடிக்க அவகாசம் தேவை

### பொலீஸ்மா அதிபர் கூறுகிறார்

கொழும்பு, நவ. 1

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸாவைக் கொலை செய்தவர் யார் என்பது பற்றி தெரிவிக்க இன்னும் சிறிது கால அவகாசம் தாருங்கள்.

பொலீஸ்மா அதிபர் பிராங் டிசில்வா, செய்தியாளர் ஒருவரின் கேள்விக்குப் பதிலளிக்கையில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

செய்தியாளர்: ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்பு பிரேமதாஸா கொல்லப்பட்டார். காமினி திஸாநாயக்காவின் கொலைபற்றிஉண்மை தெரியவர இன்னும் ஒன்றரை ஆண்டுகள் செல்ல வேண்டுமா?

பொலீஸ்மா அதிபர்: பிரேமதாஸா கொலை பற்றி பதிலளிப்பதற்குத் தயாராகநான் இங்கு வரவில்லை. விஷயங்கள் ஒத்த தன்மையாக இருக்கமுடியும். (இ-எ)

## மேலும் இருவர் உயிரிழப்பு

கொழும்பு நவ. 1

கிராண்ட்பாஸ் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் படுகாயமடைந்து கொழும்பு பெரியாஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்தவர்களில் இருவர் நேற்று முன்தினம் மரணமடைந்தனர் என்று கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. (ஓ-எ)

## காமினி கொலையுடன் தொடர்புள்ள பெண் தங்கி நின்ற இடத்தை கண்டுபிடிக்க தீவிர முயற்சி

கொழும்பு, நவ. 1

கிராண்ட்பாஸ் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் மனித குண்டாகச் செயல்பட்டதாகக் கருதப்படும் தமிழ்ப் பெண் தங்கியிருந்த இடத்தைக் கண்டுபிடிப்பதில் இரகசியப் பொலீஸார் தீவிர முயற்சி மேற்கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்காக 150 பொலீஸார் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஓ-எ)

# சந்திரிகாவுக்கு அளிக்கும் வாக்குகள் புலிகளுக்கு அளிக்கும் வாக்குகளே

### தெற்கில் இனவாத துண்டுப்பிரசுரம்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கு அளிக்கப்படும் வாக்குகள் விடுதலைப் புலிகளுக்கு அளிக்கப்படும் வாக்குகளாகும்.

இப்படிக்கூறும் அனாமதேய துண்டுப்பிரசுரங்கள் தென் இலங்கையின் பல பகுதிகளில் விநியோகிக்கப்பட்டு வருவதாக அமைச்சர் தர்ம சிறி சேனநாயக்கா தெரிவித்தார்.

இவ்வாறான இனவாத பிரசாரங்களுக்கு மக்கள் செவி சாய்க்கக் கூடாதென்றும் அவர் கேட்டுக் கொண்டிருக்கிறார். (இ-எ)

## பிரசாரம் ஞாயிறு முடிவு

கொழும்பு, நவ. 1

ஜனாதிபதித் தேர்தல் பிரசாரம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவுடன் முடிவடையும். (ஓ-எ)

# அன்று ஸ்ரீமாவோ தெரிவைக் கண்டித்த ஜே.ஆர். இன்று சிறிமா தெரிவுக்கு மௌனம் சாதிப்பது ஏன்?

### ஜனாதிபதி வேட்பாளர் ரணசிங்க கேள்வி

கொழும்பு, நவ. 1

சுட்டுக்கொல்லப்பட்ட தமது கணவனின் இடத்தை நிரப்ப தேர்தலில் ஸ்ரீமாவோ போட்டியிட்டதைப் 35 ஆண்டுகளுக்கு முன்னர் கண்டித்த ஜே. ஆர். ஜெயவர்த்தனா—

இன்று காமினியின் இடத்தை நிரப்ப இன்னொரு சிறிமா பிரவேசிப்பதை ஏன் எதிர்க்காமல் இருக்கிறார்?

ஜனாதிபதி தேர்தலில் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிடும் முன்னாள் ராஜாங்க அமைச்சர் ஏ.ஜே. ரணசிங்கா முன்கண்டவாறு கேட்டிருக்கிறார்.

கொழும்பில் இருந்து வெளியாகும் ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் அவர் இக்கேள்வியை எழுப்பினார்.

அவர் மேலும் சொன்னதாவது;

அனுதாப வாக்குகளைப் பெறும் தந்திரமாக ஐ.தே.க. சிறிமா திஸாநாயக்காவை ஜனாதிபதி வேட்பாளராக நியமித்துள்ளது.

இது 35 ஆண்டுகளுக்கு முன்பு இடம் பெற்ற நிகழ்ச்சி ஒன்றை என் நினைவுக்கு கொண்டு வருகிறது.

1959 இல் முன்னாள் பிரதமர் எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா சுட்டுக் கொல்லப்பட்டார். அவர் பிரதிநிதித்துவம் செய்த அத்தனகல நாடாளுமன்றத் தொகுதியின் இடைத் தேர்தலில் ஸ்ரீமாவோ போட்டியிடவிருந்தார்.

#### அனுபவமில்லாத ஸ்ரீமாவோ என்றார் அன்று ஜே.ஆர்.

அப்போது நடந்தது என்ன? அனுபவமில்லாத ஸ்ரீமாவோ தேர்தலில் போட்டியிடுவதா என்று ஜெயவர்த்தனா எதிர்ப்புத் தெரிவித்தார். அது மட்டுமல்ல மலிலின் நோனா என்ற பெண்ணை ஸ்ரீமாவோவுக்கு எதிராகவும் போட்டியிடவும் அவர் ஏற்பாடு செய்தார்.

அந்தக் கொள்கையில் ஜெயவர்த்தனா உறுதியாக இன்னும் இருக்கிறாரா? அப்படியானால் அவர் காமினிக்குப் பின்னர் சிறிமா திஸாநாயக்காவை ஜனாதிபதி வேட்பாளராக ஐக்கிய தேசிய கட்சி தெரிவு செய்ததை எதிர்த்து இருக்க வேண்டும்.

#### ஆதரவு திரட்ட வேண்டிய நேரம்

இப்போது தான் நான் கூடிய அக்கறை காட்டி எனக்கு ஆதரவு திரட்ட வேண்டிய நேரம் வந்துள்ளது.

உண்மை பேசும் ஒருவரே ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட வேண்டும். நான் அப்படியானவனே.

இந்த நாட்டை ஆட்சி செய்ய ஏராளமான பெண்களை அனுமதிக்க முடியாது. பெண்கள் வருவார்கள், பெண்கள் போவார்கள், அண்மைக் கால நிகழ்வுகள் முன்னரிலும் பார்க்க எனது தேவையை இப்போது வலியுறுத்துகின்றன.

இவ்வாறு அவர் தனது பேட்டியில் தெரிவித்தார். (ஓ-எ)

## காமினியின் மனைவிக்கு ரெலோ ஆதரவு

கொழும்பு, நவ. 1

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐ.தே.க வேட்பாளராக நிறுத்தப்பட்டுள்ள சிறிமா திஸாநாயக்காவையே ரெலோ ஆதரிக்கும் என்று, அதன் பொதுச்செயலாளர் கே. சிவாஜிலிங்கம் அறிவித்திருக்கிறார். (ஓ எ)

## புலிகளின் குரல் வானொலியில்

**01 — 11 — 1994**

**செவ்வாய் இரவு**

- ★ 8-01 — ஊர்சுற்றும் ஒலிவாங்கி
- ★ 8-10 — அறிந்து கொள்ளுங்கள் — தகவற்களஞ்சியம்
- ★ 8-20 — நலந்தானா— மாரிகாலத்தில் ஏற்படும் விபத்துக்களும் அவற்றை தவிர்ப்பதற்கான ஆலோசனைகளையும் வைத்திய கலாநிதி சுப்பிரமணியம் அவர்கள் வழங்குவார்
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — கருத்துக்களம் இ.இராஜேஸ்வரன் எழுதிய "கவலையீனம்"
- ★ 8-50 — களமும் கானமும் அச்சுநகர் பானுஷாந்தன் எழுதிய "எங்களின் கடல்"

**02 — 11 — 1994**

**புதன் காலை**

- ★ 7-02 — மாவீர வணக்கம்.
- ★ 7-15 — நீங்கள் கேட்டவை
- ★ 7-30 — செய்திகள்.
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்.
- ★ 7-40 — நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி.

## அகண்ட நாம பஜனை

யாழ்ப்பாணம், நவ. 1

அரியாலை பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா சேவா நிறுவனத்தினரால் எதிர்வரும் சனிக்கிழமை மாலை 5 மணி தொடக்கம் மறுநாள் ஞாயிறு மாலை 5 மணி வரையும் அகண்டநாமபஜனைகொழும்புத்துறை ஆனந்தன் வடலி வீதியிலுள்ள பிரசாந்தி நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நாட்டில் சாந்தியும் சமாதானமும், அமைதியும் ஏற்பட வேண்டி [illegible] நேர பஜனை நடைபெறும். (இ)

## ஆடம்பர வாகனங்கள் ஏலத்தில்

கொழும்பு, நவ. 1

ஐ.தே.க. அரசின் காலத்தில் அமைச்சர்களின் பாவனைக்கென கொள்வனவு செய்யப்பட்ட 28 ஆடம்பர வாகனங்கள் இம்மாதம் 5ஆம் திகதி பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.

இவ்வாகனங்களின் மொத்தப்பெறுமதி சுமார் 5 கோடி ரூபா என்று மதிப்பிடப்பட்டுள்ளது. (ஓ-எ)

## ஐ. நா. தின போட்டி

ஐ. நா. தினத்தையொட்டி சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் தென்மராட்சி கோட்ட பாடசாலை மாணவர்களிடையே நடத்திய போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில்களும் சான்றிதழ்களும் தென்மராட்சி கோட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளர் திருமதி புஷ்பாகணேசலிங்கத்தினால் வழங்கப்பட்டன. (இ-117)

## தேர்தலில் வெற்றி வாய்ப்பு சந்திரிகாவுக்கு அதிகம்

### பி.பி.ஸி. வானொலி கருத்து

காமினியின் படுகொலையால் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐ. தே. கவுக்கு அனுதாப வாக்குகள் கிடைக்கும் என்றாலும் —

இப்போதும் கூட அத்தேர்தலில் பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் சார்பில் போட்டியிடும் சந்திரிகாவுக்கே வெற்றிபெறும் வாய்ப்பு அதிகமாக இருப்பது போல் தெரிகிறது என பி. பி. ஸி. குறிப்பிட்டது.

சிறிமா திஸாநாயக்காவுக்கு அனுதாப வாக்குகள் கிடைக்கும் என்றாலும் அவர் வெற்றிபெறுவது கடினமே என கொழும்பின் அரசியல் விமர்சகர் ஒருவரை மேற்கோள்காட்டி ஏ. எவ். பி. செய்தி நிறுவனம் தகவல் வெளியிட்டது.

இதற்கிடையில் —

காமினி குண்டுத்தாக்குதலுக்குப் பலியானது ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாய்ப்பாக இருக்கலாம் என பொ. ம. ஐ. மு. அரசின் அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார். (உ-எ-4-6)

## வானொலி, ரூபவாஹினியில் தமக்கு மட்டுமே ஆதரவு கோரி பிரசாரம் செய்யலாம்

### ஹட்சனுக்கு ஆணையாளர் அறிவிப்பு

தமக்கு மட்டுமே ஆதரவு கோரி வானொலி மற்றும் ரூபவாஹினியில் உரை நிகழ்த்த வேண்டும் என்று, ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் சுயேச்சை வேட்பாளரான ஹட்சன் சமரசிங்காவுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி. சில்வா இந்த உத்தரவை விடுத்துள்ளார்.

சுயேச்சை வேட்பாளராக இருந்து கொண்டு தமக்கு ஒதுக்கப்பட்ட நேரத்தில் இன்னொரு கட்சிக்கு ஆதரவு திரட்டும் பேச்சுகளை நிகழ்த்துவது சட்டத்திற்கு முரணானது என்றும் தேர்தல் ஆணையாளர் கூறியுள்ளார்.

தாம் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிடுவது, தமக்கு வானொலி மற்றும் தொலைக்காட்சியில் பேச ஒதுக்கப்பட்டுள்ள நேரத்தை ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவைத் திரட்ட பயன்படுத்துவதற்கே என்று திரு. சமரசிங்கா முன்னர் அறிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஓ-எ)

## வலி. மேற்கில் பின் தங்கிய கிராமங்கள் அபிவிருத்தி

பின்தங்கிய கிராமங்களாக நீண்டகாலமாக இருந்து வரும் கிராமங்களை இனம் கண்டு அக்கிராமங்களில் சுகாதார குடி தண்ணீர், கல்வி, தொழில் வசதிகளை ஏற்படுத்த வலி. மேற்கு பிரதேச செயலகம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

முதற் கட்டமாக மலசல கூட வசதியற்ற கிராமங்களில் பொது மலசல கூடங்கள் அமைக்கப்படும்.

சுத்தமான குடிதண்ணீர் கிடைப்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்கும் மேற்படி கிராமப் பிள்ளைகளின் கல்வியை மேம்படுத்திக் கொள்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படும். (இ-12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி குருநாதர் செல்லம்மா

காரைநகரைப் பிறப்பிடமாகவும், பழம் றோட், கந்தர்மடத்தை வதிவிடமாகவும் கொண்ட குருநாதர் செல்லம்மா காமலாகிவிட்டார்

இவர் காலஞ்சென்ற குருநாதரின் அன்பு மனைவியும், பாக்கியம், கோபாலபிள்ளை (அளவை), சிவபாக்கியம், பேரம்பலம் ஆகியோரின் அன்புத் தாயாரும், தர்மலிங்கம் (யுனிரெக்), இராஜேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்ற நவரஞ்சனி, குலறஞ்சனி (யாழ். பல்கலைக்கழகம்), துஷ்யந்தன், தவக்குமார், திருக்குமார் ஆகியோரின் அன்புப்பேர்த்தியுமாவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் இன்று பி. ப 2 மணியளவில் கோம்பயன்மணல் மயானத்தில் நடைபெறும்.

தகவல்:
கு. தர்மலிங்கம்
(மருமகன்)

இல. 66/3, பழம் றோட்,
கந்தர்மடம்.
(33608)

## சபாபதிப்பிள்ளை இராமநாதன்

(இளைப்பாறிய அரச கணக்காளரும்,
இணுவில் சிவன் கோவில் தர்மகர்த்தாவும்)

இணுவில், மஞ்சத்தடியைச் சேர்ந்த சபாபதிப்பிள்ளை இராமநாதன் கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கமலாம்பிகையின் அன்புக் கணவரும், Dr. சிறீஸ்கந்தன் (வைத்தியசாலை, திருகோணமலை), சோமாஸ்கந்தன் (பொறியியலாளர், ஆஸ்திரேலியா), கலாநிதி கிரஞ்சனி (ஆஸ்திரேலியா), மனோகரன் (Celtel, கொழும்பு) ஆகியோரின் அருமைத் தகப்பனாரும், ரேமளா சாந்தி, மாலினி, கலாநிதி சவரிமுத்து, மனோரஞ்சனி ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான சிவரத்தினம், பராசக்தி மற்றும் விசாலாட்சி ஆகியோரின் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 32, ரத்தினகார இடம், தெகிவளையில் 31 - 10 - 94 நேற்று நடைபெற்றன.

தகவல்:
சி. பரமேஸ்வரன் (பெறாமகன்)
(இணுவில்)
(33605)

## திருமதி சரவணமுத்து தெய்வானைப்பிள்ளை

வசாவிளானை பிறப்பிடமாகக் கொண்டவரும், கைதடி வடக்கை வசிப்பிடமாகக் கொண்டவருமான சரவணமுத்து (மிருக வைத்தியர்) தெய்வானைப்பிள்ளை நேற்று (31-10-94) நண்பகல் காலமானார்.

இவர் சதாசிவம் சரவணமுத்துவின் அன்பு மனைவியும், சண்முகநாதன், இந்திரலோகநாதன் சிவதேவி அம்மா, இலட்சுமணன் சிவரஞ்சனிதேவி, ஸ்ரீஞானதேவன், செககுணநாதன், சிறிதிமாலா (சுவிஸ்) ஆகியோரின் அன்புத்தாயாரும் அம்பலம் செல்லத்துரையின் உடன் பிறப்பு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (1-11-94) செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் ஊற்றல் மையானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்;
இந்திரலோகநாதன்
(மருமகன்[

கைதடி வடக்கு,
கைதடி,
(33602)

## V.P செல்லையா (P.M)

இருபாலையைச் சேர்ந்த இளைப்பாறிய மாவட்ட தபால் அத்தியட்சகரும் [மொனராகலை], தற்போதைய வலி.கிழக்கு தென்பகுதி [நீர்வேலி] ப.நோ.கூ. சங்கத்தின் தலைவரும், இருபாலை மக்கள் நலன் காக்கும் பிரிவின் பொருளாளரும், இருபாலை கண்ணகியம்பாள் மாதர் சங்கம், இருபாலை கண்ணகியம்பாள் ஐக்கிய நாணய சங்கம், இருபாலை கிழக்கு சனசமூக நிலையம் ஆகியவற்றின் போஷகருமான V.P. செல்லையா (P.M.) 30.10 94 இல் காலமானார்.

இவர் இருபாலையைச் சேர்ந்த காலஞ்சென்ற பேரம்பலம் சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், சந்தானலக்சுமியின் (மகேஸ்) அன்புக் கணவரும் அளவெட்டி முன்னாள் யானை மார்க் சுருட்டுக் கம்பனியின் உரிமையாளர் காலஞ்சென்ற பொன்னையா தம்பதிகளின் அன்பு மருமகனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 1.11.94 இன்று செவ்வாய் பி.ப. 2.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மனைவி

இருபாலை கிழக்கு,
இருபாலை.
(33606)

## கந்தையா சுப்பிரமணியம்


முன்னாள் பரந்தன், பிரபல வர்த்தகரும் ஆனைக்கோட்டை வாசியுமான காந்தையா சுப்பிரமணியம் நேற்றுக்காலமானார். இவர் திலகமணியின் அன்புக்கணவரும் சோதிராஜன் (R.D.D. வவுனியா), சந்திராதேவி, இந்திராதேவி, சாரதாதேவி (ஜேர்மனி), உதயசோதி (ஜேர்மனி), ஜெகசோதி (பிரான்ஸ்), ரேணுகாதேவி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், கிருஷ்ணஜோதி, கேதாரலிங்கம் (ப.நோ.கூ. சங்கம் வவுனியா], காலஞ்சென்ற நரேந்திரநாதன், மனோகரன் (ஜேர்மனி), சிறிதரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும், உமாகஜன், சியாமா, கேந்தினி (ஜேர்மனி), யாழினி, வினோதினி, தர்சினி, குமுதினி, விசாகினி, ஜனார்த்தனி, தர்மநகுலேஸ்வரன், துஷா (ஜேர்மனி), பிரியதர்ஷினி (ஜேர்மனி), அருண் (ஜேர்மனி), அனோச் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
சு. சோதிராஜன்
(மகன்)

பழைய பொலிஸ் நிலையம்
ஆனைக்கோட்டை.
(33609)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிற்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 01—11—1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.



காமினியைப் பலிகொண்ட கிராண்ட்பாஸ் குண்டு வெடிப்பு எப்படி நிகழ்ந்திருக்கும் என்பதை கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று வரைபடம் மூலம் வெளிப்படுத்தியுள்ளது. அந்தப் படத்தையே மேலே காண்கிறீர்கள். இத் தாக்குதலை நடத்தியதாகக் கூறப்படும் தற்கொலைத் தாக்குதல் பெண்ணின் தலையை மேல் மூலையிலும் அது விழுந்து கிடந்ததாகக் கூறப்படும் இரண்டு மாடி கட்டடக் கூரையையும் காணலாம்.

### தேர்தலுக்கு முன்னர்

## சாதகம் பார்க்க காமினி இந்தியா சென்றிருந்தார்

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் காமினி திஸாநாயக்கா இந்தியா சென்றது. அங்குள்ள பிரபல ஜோதிட நிபுணர் பார்த்தசாரதியைச் சந்தித்து ஆலோசனை கேட்கவே என்ற விவரம் தற்போது வெளியாகியுள்ளது.

காமினி கொலையுண்டதை அடுத்து ஜனாதிபதி மாளிகையில் நடந்த சந்திப்பு ஒன்றின் போது பிரதமர் சந்திரிகா விக்ரம வீரசூரியாவிடம் காமினியின் சாதகபலன் எப்படி என்று விசாரித்தார். அப்போது தான் முன்கண்ட தகவல் வெளியான்து.

எனினும் இந்தியாவில் ஜோதிட நிபுணர் பார்த்தசாரதியை காமினியால் சந்திக்க முடியவில்லை. ஏமாற்றத்துடன் அவர் கொழும்பு திரும்பவேண்டியதாயிற்று. பின்னர் ஜி. எம். பிரேமச்சந்திரா இந்தியா சென்று பார்த்தசாரதியைச் சந்தித்து காமினியின் சாதகத்தை அவரிடம் காட்டினார். பலன் நன்றாக இருப்பதாக பார்த்தசாரதி கூறினார் என்று ''சண்டே ரைம்ஸ்'' தகவல் வெளியிட்டுள்ளது. (ஐ—எ)

### ரணில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சிங்கா தலைமையிலான குழு மேற்கொண்டது.

முன்னாள் சபாநாயகர் முஹம்மது, முன்னாள் அமைச்சர்கள் விஜேபால மென்டிஸ், பெஸ்டஸ் பெரேரா, ஜெயவிக்ரம பெரேரா, அனுரா பண்டாரநாயக்கா ஆகியோர் அக்குழுவில் இருந்தனர்

இக்கட்டத்தில் காமினியின் மைத்துனரான டாக்டர் விக்ரம வீரசூரிய ரணிலைச் சந்தித்து, ''சிறிமா திஸநாயக்கா தான் சிறந்த வேட்பாளர்; உங்களால் வெற்றியீட்ட முடியாது''— என்று கூறினார்.

''நீங்கள் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டால் காமினியின் ஆதரவாளர்களின் ஆதரவு உங்களுக்குக் கிடைக்காது''— என்றும் வீரசூரியா கூறினாராம்.

அன்றிரவே விஜேபால மெண்டிஸூம் சுசில் முனசிங்காவும் ஜனாதிபதி விஜேதுங்காவைச் சந்தித்துப் பேசினர். அதனைத் தொடர்ந்து விஜேதுங்கா தனது மனதை மாற்றிக் கொண்டார் என்று தெரிவிக்கப்படுகிறது. (உ—எ)

### புயலால்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

லப்பட்டனர் என்று அறிவிக்கப்பட்டது.

சென்னையில் கடும் மழை பெய்து வருகிறது. சுமார் 40 லட்சம் மக்கள் வாழும் சென்னை நகரம் புயலினால் பாதிக்கப்பட்டிருக்கிறது.

சென்னைத் துறைமுகத்தில் நங்கூரமிட்டு நின்ற கப்பல் ஒன்று கடலில் மூழ்கியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(அ—ஐ)

(முன்னர் வந்த செய்தி 5 ஆம் பக்கத்தில்)

### சுற்றுலாத்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சேர்ந்தோர் ஐ. தே. கட்சிக்கோ அல்லது பொ. ஐ. முன்னணிக்கோ தமது மனச்சாட்சிப்படி வாக்களிக்கலாம் என்று அவர் அறிவித்திருந்தார் என்பது தெரிந்தவையே.

பிரதமர் சந்திரிகாவை கடந்த வியாழன் காலை மீண்டும் தொண்டமான் சந்தித்துப்பேசினார்.

''எனக்கு அமைச்சர் பதவி தரப்படும் வரை ஜனாதிபதித் தேர்தலில் மனச்சாட்சிப்படி வாக்களிக்கும் கொள்கையையே நான் கடைப்பிடிப்பேன்.''— என்று தொண்டமான் பிரதமரிடம் அப்போது நேரடியாக தெரிவித்தார் என ''சண்டே ஐலண்ட்'' தகவல் வெளியிட்டிருந்தது.

அச்சமயம் பிரதமர் தமது முந்திய நிலைப்பாட்டை வலியுறுத்தினார் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஐ. தே. க. அமைச்சரவை முழுவதுமே ஊழல் மயமானதாக இருந்தது எனத்தாம் குறிப்பிட்டுள்ளதால் அந்த அமைச்சரவையில் அங்கம் வகித்த ஒருவருக்கு எப்படி அமைச்சர் பதவி வழங்குவது? என்று பிரதமர் குறிப்பிட்டார்.

எனினும் - விரைவில் பிரச்சினைக்குத் தீர்வுகாணப்படும் என்று உறுதியளித்த பிரதமர், பொ. ஐ. முவும் இ. தொ. காவும் விரைவில் சேர்ந்து பணியாற்ற முடியும் என்றும் தொண்டமானிடம் தெரிவித்தார்.

இவ்வாரத்தினுள் தமக்கு அமைச்சர் பதவி கிடைக்கும் என்று தொண்டமான் நம்பிக்கை தெரிவித்திருந்ததாக ''சண்டே ஐலண்ட்'' நேற்று முன்தினம் செய்தி வெளியிட்டிருந்தது. (உ-எ-ஐ)

### மன்னாரில்....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

★ ஸ்ரனிஸ்லாஸ் சுகந்தன் பெர்னாண்டோ [வயது 18]
★ ராஜா அல்லது பிரான்ஸிஸ் பெர்னாண்டோ [வயது 26]
★ யோகன் அல்லது அந்தோனி செபஸ்ரியான் பீரிஸ் [வயது 17]
★ அலோசியஸ் பீரிஸ் நவத்தராஜ் [வயது 17]
★ பெர்ணாட் யூட்டின் பெர்னாண்டோ [வயது 26]
★ அந்தோனி பிரான்ஸிஸ் பீரிஸ் [வயது 33]
★ குரோதாஸ், பேர்னாபட் பீரிஸ் [வயது] 35]
★ ஜோசஃ மேரியர் [வயது 34]

கொல்லப்பட்டவர்களில் ஒருவரின் சடலங்கள் மீட்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

### சிகரெட்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சேகரா சினிமாப்படத் தயாரிப்பாளர் ஆவார்.

மக்களுக்கு யுத்தத்தினால் ஏற்படும் துன்பங்களை விவரிக்கும் 'நொமியன மினிஸ்ஸு' என்ற திரைப்படத்தை பேர்னாட் குணசேகரா தயாரித்திருந்தார். (உ—எ)

### மலையக...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அரசு எப்படிச் செயலாற்றப் போகின்றது என்பதைக் காலம்தான் தீர்மானிக்கும்— இவ்வாறு கொழும்பில் செய்தியாளர் ஒருவர் குறிப்பிட்டார். (உ—எ-6)


# தீபாவளி மலிவு விற்பனை

★ கஸியோ (Casio)
★ சிற்றிசன் (Citizen)

கைக் கடிகாரங்கள்!

மலிவு விற்பனை!!

★ 01 · 11 · 1994 வரை ★

## அல்டி

269/1, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
(சி-9548)


The Members of the methodist Church Jaffna Circuit Salute to our beloved President

## Revd. Dr. KINGSLEY T. MUTHIAH

Who had gone Forward to the

**Church Triumphant**

For the love which we received and he gave love in abundance. It was announced that the funeral Service will take place on Wednesday the 2nd November at 3 p. m. at Kollupitiya Methodist Church.

Hence a Service will be held at the same time at st. Peters Methodist Church Jaffna (Trimmer Hall) on Nov. 2nd at 3 p. m.

Please Condole by Sharing the worship.

29-10-94 இறைவனடி சேர்ந்த அருட்திரு கலாநிதி கிங்ஸ்லி தேசிகநேசன் முத்தையா அவர்களின் நல்லடக்க ஆராதனை கொழும்பு கொள்ளுப்பிட்டி மெதடிஸ்த தேவலயத்தில் 2-11-94 புதன் பிற்பகல் 3-00 மணிக்கு நடைபெறும். அதே நேரத்தில் யாழ்ப்பாணம் பரி பேதுரு தேவாலயத்திலும் (ரிம்மர் மண்டபம்) ஆராதனை நடைபெறவுள்ளது. தயவு செய்து யாவரும் அன்பாக அழைக்கப்படுகின்றீர்கள்.

இறை ஊழியர்கள்
மெதடிஸ்த சபை,
யாழ்ப்பாண சேகரம்.

(சி-9572)

Service of Rememberence and Thanks Giving for the Life and Ministry of

## Revd. Dr. KINGSLEY T. MUTHAIAH

President, Methodist Church - Srilanka

அருட்திரு. கலாநிதி கிங்ஸ்லி

## தேசிகநேசன் முத்தையா

திருப்பேரவைத் தலைவர்
இலங்கை மெதடிஸ்த திருச்சபை

அவர்களின் வாழ்வையும் - திருப்பணியையும் — தலைமைத்துவத்தையும் நினைவுகூரும் நன்றி (ஸ்தோத்திர) வழிபாடு.

அருட்திரு. கலாநிதி கிங்ஸ்லி தேசிகநேசன் முத்தையா அவர்கள் 29 - 10 - 1994 அன்று மாலை கொழும்பில் இறைமகிமைக்குள் - மகிமைப் பிரவேசம் அடைந்தார். அன்னாரின் வாழ்வையும், திருப்பணியையும் - தலைமைத்துவத்தையும் நினைவுகூர்ந்து இறைவனுக்கு நன்றிசெலுத்தும் வழிபாடு 02-11-1994 (புதன்கிழமை) மாலை 3. 30 மணிக்கு பரு./கட்டைவேலி மெதடிஸ்த ஆலயத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை அனைவரும் தயவாக ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
அருட்திரு. B.J. மேநர்

Circuit Superintendent,
Methodist Church,
Pt.pedro - Kaddaivelly Circuit.
(33585)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org